விலை ரூபா: 15.00


Registered as a News paper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 06 திங்கட்கிழமை (21.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 215




## இலுப்பைக்கடவை படையினர் வசம் இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மன்னார் இலுப்பைக்கடவைப் பகுதியினைப் படையினர் நேற்றுக் கைப்பற்றியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

விடத்தல் தீவுப் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் 10 கிலோமீற்றர் வடக்கில் முன்னேறி இலுப்பைக்கடவையினை முழுமையாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாகவும் அவர் கூறினார். இது தொடர்பாக பிரிகேடியர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மன்னார் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கிய முன்னகர்வு முயற்சியை மேற்கொண்டு வரும் இராணுவத்தின் 58 ஆம் இலக்கப் படையணியினராலேயே இலுப்பக்கட்வை முழுவதும் கைப்பற்றப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச சார்பற்ற அமைப்புகளுக்கு புதிய விதிமுறைகள் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இயங்கும் அரச சார்பற்ற அமைப்புகளுக்கும் அவற்றில் பணிபுரிபவர்களுக்கும் அரசு புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ள இந்தப் புதிய விதிமுறைகள், அரசு சார்பற்ற அமைப்புக்களின் தலைவர் மற்றும் பிரதித் தலைவர் ஆகியோரைக் கட்டுப்படுத்தாது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

புதிய விதிமுறைகளின்படி இலங்கையில் இயங்கும் அரச சார்பற்ற அமைப்புகளுக்குத் தேவையான பணியாளர்களைச் சேர்ப்பதில் இலங்கைக் குடிமக்களுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

அவ்வாறு அந்த அமைப்பு கோரும் தகுதியுடையவர்கள் இலங்கையில் இல்லை என்றால் மட்டுமே, (12 ஆம் பக்கம் பார்க்க)

# சார்க் மாநாட்டைக் குழப்புவதற்கு விடுதலைப்புலிகள் முயலவில்லை



## அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

சார்க் மாநாட்டைக் குழப்புவதற்கு விடுதலைப்புலிகள் முயற்சிக்கவில்லை. தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் சுதந்திரப் போராட்டத்துக்குப் பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பை நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம் என விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார். (02 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் பலி

(கிளிநொச்சி)

அம்பாறை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய பதுங்கிச் சூட்டுத் தாக்குதலில் சிறப்பு அதிரடிப் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இத் தாக்குதல் அம்பாறை வம்பியடிக்குளம் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடத்தப்பட்டுள்ளது எனப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் நடத்திய எறிகணைத் தாக்குதலில் அதிரடிப் படையினர் இருவர் காயமடைந்தனர் என்று அம்பாறை மாவட்ட விடுதலைப்புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## சார்க்கில் புதிய திட்டத்தை ஜனாதிபதி முன்வைப்பார்

(கொழும்பு)

சார்க் பிராந்திய நாடுகளில் இயங்கி வரும் பிரிவினைவாத மற்றும் பயங்கரவாத அமைப்புக்களை இல்லாதொழிப்பதற்குக் கூட்டுத் திட்டம் ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சார்க் மாநாட்டில் முன்வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சார்க் பிராந்திய நாடுகளில் சுமார் 9 பிரதான தீவிரவாத இயக்கங்கள் இயங்கி வருவதாகவும் சர்வதேச சக்திகளின் உதவியுடன் பிராந்திய நாடுக (12 ஆம் பக்கம் பார்க்க)

## பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க இந்திய மத்திய அரசு பகீரதப் பிரயத்தனம்

### காப்பாற்றவும் கவிழ்க்கவும் கட்சிகள் தீவிரம்

(புதுடில்லி)

இந்தியாவில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் தனது பெரும்பான்மைப் பலத்தை நாளை 22 ஆம் திகதி இந்திய நாடாளுமன்றத்தில் நிரூபிக்க வேண்டிய நிலையிலுள்ளது. வாக்கெடுப்பில் தனது பெரும்பான்மையை ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் அரசாங்கம் கவிழும் நிலை உருவாகும்.

இந் நிலையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசைக் காப்பாற்றுவதற்கு ஆளும் தரப்பினரும் கவிழ்ப்பதற்கு எதிர்த்தரப்பினரும் பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்திய அரசுக்கு அளித்து வந்த ஆதரவை இடதுசாரிக் கட்சிகள் வாபஸ் பெற்றதையடுத்து நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய அவசியம் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்புப் பிரிவை மூடத் தீர்மானம்?

### ஆலோசனைகளை ஏற்க மறுத்ததால்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் தனது பாதுகாப்புப் பிரிவை மூடுவதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதுகாப்பு, அரசியல் விடயங்கள் தொடர்பில் பிரித்தானியா வழங்கிய ஆலோசனைகளை இலங்கை பின்பற்றத் தவறியமையை அடுத்தே அந்நாடு இம் முடிபை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்புப் பிரிவே இரு நாடுகளுக்கு இடையிலான இராணுவப் பயிற்சிகள், புலனாய்வுத் தகவல் பரிமாற்றங்கள், (12 ஆம் பக்கம் பார்க்க)

## வலிந்த தாக்குதல்களைப் புலிகள் முகமாலையில் ஆரம்பிக்க வேண்டும்

### முகமாலை கட்டளை அதிகாரி தெரிவிப்பு



(கொழும்பு)

படையினரின் முகமாலைக் காப்பரண்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்த வேண்டும் என்று தான் பிரார்த்திப்பதாகவும் அவ்வாறு தாக்குதல் நடத்தும் புலிகளை ஒழிப்பதற்கே தாம் காத்திருப்பதாகவும் 55-வது டிவிசன் படையணியின் உப பிரிவு கட்டளை அதிகாரி பிரிகேடியர் கமல் குணரட்ன தெரிவித்துள்ளார்.

தென்பகுதியிலிருந்து சென்ற சிங்கள ஊடகவியலாளர்களுக்கு மிருசுவில் பகுதியில் வைத்து (12 ஆம் பக்கம் பார்க்க)

# சார்க் மாநாட்டைக் குழப்புவதற்கு...

அரசாங்கம் அண்மையில் 1-4 பேஸ் மற்றும் மன்னார் நெற் களஞ்சியம் ஆகிய முகாம்களை கைப்பற்றியதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் மரபு ரீதியான போராற்றலை வலுவிழக்கச் செய்துள்ளதாக அறிவித்திருந்தது. உங்களின் பார்வையில் விடுதலைப் புலிகள் எவ்வளவு பலவீனமடைந்துள்ளனர்?

1-4 என்ற பேஸ் முகாம் தற்போது எமது கைவசம் இல்லை. சிறிலங்காப் படையினர் மன்னார் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குதல் மேற்கொள்வதனால் அவர்கள் இடம்பெயர நேரிட்டுள்ளது.

இந்த வயல்வெளிகள் மக்களின் பிரதான வாழ்வாதாரமாக காணப்படுகின்றது.

குறித்த பிரதேச மக்களை வெளியேற்றி அதன்மூலம் மன்னார் நெற் களஞ்சியம் பகுதியை கைப்பற்றியதாக அறிவிப்பதன் மூலம் சிங்கள அரசாங்கத்தின் மனோநிலை தெளிவாக புலனாகின்றது.

கடந்த 30 ஆண்டு காலமாக சிறிலங்கா அரசாங்கங்கள் இவ்வாறான போலியான பிரசார நடவடிக்கைகளை வலிந்து மேற்கொண்டு வருகின்றன.

அனைத்துக் காலங்களிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் தங்கள் மரபு ரீதியான போரற்றலின் மூலம் சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்து தமிழ் மக்களை பாதுகாத்து வந்துள்ளது.

களநிலைமைகளுக்கு ஏற்ப நாம் மாறுபட்ட அணுகுமுறைகள் மற்றும் தந்திரோபாயங்களை பயன்படுத்துகின்றோம். கடந்த காலங்களிலும் தற்போதும் எந்த வகையிலான இராணுவத் தாக்குதல்களையும் சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய வல்லமையை விடுதலைப் புலிகள் மிகத் தெளிவாக உலகிற்கு பறைசாற்றியுள்ளனர்.

சமீப காலமாக தெற்கில் பேருந்து மற்றும் தொடருந்துகளில் தொடர் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இந்த சம்பவங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மீதே குற்றம் சுமத்தப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக பலவீனமடைந்த காரணத்தினாலா பொது மக்கள் இலக்குகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன?

ஒருபோதும் பொதுமக்களை இலக்குவைத்து நாம் தாக்குதல் மேற்கொள்ளவில்லை. நாம் பலவீனமடையவில்லை. தாயகப் பிரதேசத்தில் அனைத்து நடவடிக்கைகளையும் நாம் தொடர்ந்தும் மேற்கொள்வோம்.

சிறிலங்கா அரசாங்கமே பொது மக்களை இலக்குவைத்து தாக்குதல்கள் மேற்கொள்கின்றது. உண்மைகளை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர்கள் மீது மகிந்த அரசாங்கம் போர் தொடுத்துள்ளது.

இதனை ஏன் நீங்கள் இவ்வாறு நோக் கக்கூடாது? ஆயுதக் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் படைத்தரப்பை சேர்ந்த உயர் அதிகாரிகளும் முகவர் நிறுவனங்களும் பாரிய அளவு வருமானம் ஈட்டுகின்றனர்.

இவர்கள் போர் முடிவுக்கு கொண்டு வருவதனை ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். துணை இராணுவக் குழுக்களை பயன்படுத்தி இழி செயல்களை மேற்கொண்டு போர் தொடர்வதை இவர்கள் உறுதிப்படுத்திக் கொள்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கு மிகவும் பலமானதோர் புலனாய்வு வலையமைப்பு காணப்படுகின்றது. விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதல்களை மேற்கொள்ளாவிடின் உங்களுக்கு கிடைத்த தகவல்களின்படி யார் இதனை மேற்கொள்கின்றனர்?

ஆம், எம்மிடம் மிகவும் வலுவான ஓர் புலனாய்வு வலையமைப்பு காணப்படுகின்றது. அதன் மூலம் எமதுமக்களையே நாம் பாதுகாப்பதற்கு விளைகின்றோம். தேவையற்ற விடயங்களை ஆராய்வதில் எமது நேரத்தை வீணடிக்க நாம் தயாரில்லை.

எனினும் இந்த தாக்குதல்களை மேற்கொள்வோர் தொடர்பில் ஊகங்களை வெளியிடமுடியும். இந்த அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தரப்பினரை அடக்கு முறைக்கு உள்ளாக்குவதற்கு ஓர் குழு இயங்கி வருகின்றது.

மேர்வின் சில்வா போன்ற நபர்கள் இந்த குழுவின் முக்கிய உறுப்பினர்கள் ஆகும். அரசியல் ரீதியான அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக சிங்கள மக்களை கொன்று குவிப்பதற்குக் கூட இவர்கள் தயக்கம் காட்ட மாட்டார்கள்.

**இந்த தாக்குதல் குறித்து உங்கள் அமைப்பின் மீதே குற்றம் சுமத்தப்படுகின்றது. அனைத்துலக ரீதியிலும் இந்த தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகளே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே இது குறித்து உண்மை நிலையை வெளிப்படுத்த வேண்டுமல்லவா?**

எந்தவொரு ஆதாரமுமின்றி நாம் இந்த தாக்குதல்களை மேற்கொள்வதாக அனைத்துலக சமூகம் எடுக்கும் தீர்மானங்களையிட்டு நாம் கவலையடைகின்றோம். 1971,1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்கள இளைஞர்களை படுகொலை செய்வதற்கு சிங்கள அரசாங்கங்கள் சற்றும் தயங்கவில்லைஎன்பதைநினைவு படுத்த விரும்புகின்றேன்.

தென்பகுதித் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொள்ளாவிடின், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கத்தின் நியாயப்படுத்தல்களையும் ஏற்றுக்கொள்ள நேரிடும் அல்லவா?

இந்தத் தாக்குதல்களை அரச படையினர் மேற்கொள்கின்றனர் என்பதை நிரூபிப்பதற்கு எம்மிடம் போதியளவு சான்றுகள் உள்ளன.

சிறிலங்கா அரசாங்கம், அனைத்துலக சமூகம் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு வாய்ப்பு வழங்கினால் இந்த ஆதாரங்களை அம்பலப்படுத்த முடியும்.

**1991ஆம் ஆண்டு கிழக்கில் 600 காவல்துறையினர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்கு அரசாங்கம் விசாரணை ஆணைக்குழுவொன்றை நிறுவியுள்ளது. அண்மையில் லண்டனில் இருந்து நாடுதிரும்பிய கருணா, இந்தப் படுகொலைகளை தாம் மேற்கொள்ளவில்லை எனவும் புலிகளின் புலனாய்வுத் துறைப்பொறுப்பாளர் பொட்டு அம்மானிடம் குறித்த காவல்துறை உறுப்பினர்கள் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இது குறித்து உங்களின் கருத்து என்ன?**

நாம் ஓர் போராட்ட இயக்கமாகும். ஒழுக்கவிதிகளை நாம் மிகவும் உச்ச அளவில் பேணிப் பாதுகாக்கின்றோம். கருணா மீது ஒழுக்கவிதிகளை மீறிச் செயற்பட்டமைக்கு எதிராக தண்டனை வழங்க ஆயத்தமாகும் போது தப்பிச் சென்றுவிட்டார். தற்போது அரசாங்கத்துடன் இணைந்து துணை இராணுவக் குழுக்களுடன் செயலாற்றி வருகின்றார்.

**ஜெனீவா உடன்படிக்கையின் பிரகாரமே தமிழீழ விடுதலைப் புலிகள் சிறிலங்கா படையினருடன் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை களைந்தால் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தயார் என அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷ அண்மையில் அறிவித்திருந்தார். நீங்கள் பேச்சுக்குத்தயாரா? இல்லையெனில் என்ன காரணம்?**

நிபந்தனைகளற்ற சூழ்நிலையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். 30 வருடங்களுக்கு முன்னர் எமது மக்களை பாதுகாப்பதற்காக நாம் ஆயுதங்களை கையில் ஏந்தினோம்.

மகிந்த ராஜபக்ஷவின் பொறுப்புணர்ச்சியற்ற வேண்டுகோளுக்காக எமது மக்களை காப்பாற்றும் தலையாய கடமையிலிருந்து விடுபடுவதற்கு நாம் ஒருபோதும் தயாராக இல்லை.

**2006ஆம் ஆண்டு முதல் இது வரையில் 9 ஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், மேலும் 5 ஆயிரம் விடுதலைப்புலி உறுப்பினர்களே எஞ்சியிருப்பதாகவும் இந்த காலப் பகுதியில் ஆயிரத்து 700 படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா அண்மையில் வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார். இந்தத் தகவல்களை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா? இல்லையெனில் உங்கள் கருத்துப்படி கள நிலைவரங்கள் எவ்வாறு அமைந்துள்ளது?**

அவர் அநேக சந்தர்ப்பங்களின் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை வெளியிட்டு வருகிறார். அவரின் தகவல்கள் சிங்கள மக்கள் மற்றும் அனைத்துலக சமூகத்தை பிழையான பாதைக்கு இட்டுச் செல்லக் கூடும். அப்பாவி சிங்கள இளைஞர்கள் தமது உயிர்களை தியாகம் செய்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அரசியல் தலைமைகளும், இராணுவத் தளபதிகளும் சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர்.

**ஆயிரம் போராளிகளைக் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இன்னும் 20 ஆண்டுகள் வரை தமது போராட்ட நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் எனவும் இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். தமிழ்த் தேசியவாத ஆதரவு கிட்டும்வரை விடுதலைப் புலிகள் தொடர்ந்து இயங்கக்கூடிய இயலுமை கிட்டும் என அவர் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு நியாயமான தீர்வுத்திட்டங்களை அரசாங்கத்தினால் வழங்க முடியுமா?**

கடந்த 50 ஆண்டுகாலப்பகுதியில் எந்தவொரு அரசாங்கமும் தமிழர் பிரச்சினையை சரியான முறையில் அணுகவில்லை. இதற்கு பண்டா-செல்வா உள்ளிட்ட பல உதாரணங்களை முன்வைக்க முடியும்.

சிங்கள அரசாங்கங்களின் தோல்வி காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்க நேரிட்டுள்ளது.

தமிழர்களுக்கு நியாயமான முறையில் அரசியல் தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படும் வரை தமிழீழ விடுதலைப் புலிகளின் விடுதலைப் போராட்டம் தொடரும்.

**அனைத்துக்கட்சிக் குழுவினால் முன்வைக்கப்படும் சமஷ்டித் தீர்வுத் திட்டத்தின் மூலம் தமிழர்களுக்கு நியாயமான தீர்வுத்திட்டங்கள் கிடைக்கப்பெற்றால் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டத்தை தமிழ் மக்கள் நிராகரிக்கக்கூடும் என்ற அச்சம் நிலவுகின்றதா?**

அனைத்துக் கட்சிக்குழு மற்றுமொரு ஏமாற்று நாடகமாகும். மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அனைத்துலக சமூகத்தை ஏமாற்றுவதற்காகவே இந்தத் திட்டத்தை முன்வைத்துள்ளது. அனைத்துக் கட்சிக்குழு பரிந்துரைகளில் பல்வேறு குழப்பங்கள் காணப்படுகின்றன.

இந்தப் பரிந்துரைகள் தமிழர்களின் நியாயமாக கோரிக்கைக்கு ஒருபோதும் தீர்வுத்திட்டமாக அமையாது.

**சார்க் மாநாடு நடைபெறாமல் இருப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முயற்சி மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது?**

சார்க் மாநாட்டை குழப்புவதற்கு நாம் முயற்சிக்கவில்லை. தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் சுதந்திரப் போராட்டத்திற்கு பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பை நாம் எதிர்பார்க்கின்றோம்.

**விடுதலைப் புலிகளை பலவீனப் படுத்தியுள்ளதாக சிறிலங்கா படைகள் அறைகூவல் விடுகின்றன. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களை வாக்களிப்பில் இருந்து புறக்கணித்தமை ஓர் மாபெரும் தவறாக நீங்கள் தற்போது கருதுகின்றீர்களா?**

ஐக்கிய இலங்கையையும் ஜனாதிபதி தேர்தல் மூறைமையையும் தமிழ் மக்கள் நிராகரித்தனர். இதனால் சிறிலங்காவின் அரசியல் கட்டமைப்பில் செல்வாக்கை செலுத்துவதற்கு தமிழ் மக்கள் என்றுமே நாட்டம் காண்பிக்கவில்லை.

சுதந்திர தமிழர் தாயகம் ஒன்றுக்கான ஆணையை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கு வழங்கியுள்ளனர்.

**ஒன்று, இரண்டு வான் தாக்குதல்களைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் வானூர்திகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அரச படைகள் புலிகளின் வானூர்திகளுக்கு எதிராக தாக்குதல் மேற்கொள்ளக்கூடிய சிறந்த பலத்தை கொண்டுள்ளனர் என்பதே இதன் மூலம் அர்த்தப்படுகின்றதா?**

இது மிகவும் பிழையானதோர் மதிப்பீடு. இதன் மூலம் எமது தந்திரோபாயங்களையோ திட்டங்களோ வெளிப்படுத்தப்படமாட்டாது.

**போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டுள்ளது. வடக்கு -கிழக்கை இரண்டாகப் பிரித்து கிழக்கில் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளது. எதிர்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சு மேற்கொள்ளத் தயாரானால் ஓர் புதிய போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமா?**

தமிழர் தாயக மக்கள் பிரிக்கப்படவில்லை. தமிழர் தாயகப் பிரதேசம் வடக்கு -கிழக்கை ஒன்றிணைத்த ஒன்றேயாகும். போர் நிறுத்த உடன்படிக்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க ஓர் பின்னணியை உருவாக்கியிருந்தது.

அரசாங்கமே போர் நிறுத்த உடன்படிக்கையை இரத்துச் செய்தது.

**இலங்கையின் தேசியப் பிரச்சினை தொடர்பில் இந்தியாவின் பங்களிப்புக்குறித்து உங்களின் கருத்து என்ன? அண்மைக்காலமாக இரு நாடுகளுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பாதுகாப்பு ஒத்துழைப்பு நடவடிக்கைகள் குறித்து விடுதலைப் புலிகள் கவலையடைந்துள்ளனரா?**

தமிழ் மக்கள் இந்த பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றி அதிக முனைப்பு காட்டி வருகின்றனர். இந்த ஒத்துழைப்பின் மூலம் தமிழர்களை அழிக்க சிறிலங்கா அரசாங்கம் முயற்சி மேற்கொள்வதனை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

கடந்த காலங்களிலும் சிறிலங்கா அரசாங்கங்கள் இவ்வாறான அடக்கு முறைகளை தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருந்தது. இந்தியா பிரச்சினைகளை சந்திக்கும்போது அதனை சிறிலங்கா அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டது.

(ச-5)

**'கொழும்பில் இருந்து வெளிவரும் த சண்டே லீடர் ஆங்கில வார ஏட்டிற்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வழங்கிய செவ்வியின் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகின்றது.'**


## விற்பனைக்கு

வர்ண மீன்கள், மீன்களுக்கான மருந்துகள், மீன் தொட்டி உபகரணங்கள், ஆடு, மாடு, நாய்களுக்கான பூச்சி மருந்துகள், தடுப்பூசிகள், வர்ண செவ்வரத்தைகள், பூஞ்செடிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக் குண்டு.

**திருப்பதி மெமோறியல் லேன், மானிப்பாய்.** (1471)


## மரண அறிவித்தல்

## அப்புத்துரை சேதுநாயகி



கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஸ்தாபகர் அம்பலவாணர் கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரியும், அமரர் கி.மு.அப்புத்துரை (சைவவித்தியா விருத்திச்சங்க முன்னாள் கணக்காளர்) அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற அம்பலவாணர் சின்னத்தம்பி-தங்கமுத்துப்பிள்ளை (கோப்பாய்/மூளாய்) தம்பதிகளின் மருமகளும் ஆகிய சேதுநாயகி அவர்கள் 20.07.2008 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தற்பரானந்தன் (ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்), நித்தியானந்தன் (நில அளவையாளர் -டுபாய்), சர்வானந்தன் (எரியூட்டுநர் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை), குலகுணேஸ்வரி, குலகுணராணி, குலகுணசக்தி, காலஞ்சென்ற தேவானந்தன் (பொறியியலாளர்) ஆகியோரின் தாயாரும்,

நகுலாம்பிகாதேவி (ஆசிரியை கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), ஹேமாங்கினி (ஜெயபாலசிங்கம் கப்பற்கம்பனி முன்னாள் அலுவலர்), சித்திரர், சண், கந்தையா (யாழ்.பொதுநூலக முன்னாள் மேற்பார்வையாளர்), க.செல்வக்குமாரன் (அதிபர் யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை) ஆகியோரின் மாமியாரும்,

திருமதி குமுதினி விஸ்வநாதன் (ஆசிரியை கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), திருமதி ஜபாலினி பிரணவன் (கனடா), துவாரகன் (மட்டக்குளிய உயர்தொழில்நுட்ப கல்லூரி மாணவன்), மைதினி, மாதினி, அர்ச்சுதன் (மாணவன் கொழும்பு இந்துக்கல்லூரி), சிவ்கரன், சிவஜீவன் (மாணவன் கொழும்பு றோயல் கல்லூரி), சிந்துஜா (அராலி சரஸ்வதி ம.வி), கஜானன், சாம்பவி (வேம்படி மகளிர் கல்லூரி), சர்வகா (மாணவி யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை) ஆகியோரின் பேர்த்தியும் அட்சயாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (21.07.2008) திங்கட்கிழமை மு.ப.10.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று தொடர்ந்து சங்கம்புலவு மயானத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்று அதன் பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'ஆனந்தகம்'**
**கந்தரோடை,**
**சுன்னாகம்.** (1475)

**தகவல்;**
**குடும்பத்தினர்.**

## இன்று ஒரு தகவல்

### அரசு எவ்வழி...!

ஒரு ராஜா ஒருநாள் வேட்டைக்குப் போனார். போகும் வழியில், ஒரு சிறிய கிராமத்தில் தங்கினார். அரண்மனையிலிருந்து கொண்டுவந்த சாப்பாட்டை பரிமாறினார்கள். அந்த சாப்பாட்டில் உப்பு கொஞ்சம் குறைவாக இருந்தது.

உடனே ராஜா ஒரு சேவகனைக் கூப்பிட்டு, ''அரண்மனைக்குப் போய் கொஞ்சம் உப்பு எடுத்துக்கொண்டு வா...'' என்றார். இதைக் கவனித்த அமைச்சர், ராஜாவுக்கு ஒரு யோசனை சொன்னார்.

''அரசே! கொஞ்சம் உப்புக்காக அவ்வளவு தூரம் போக வேண்டுமா? இப்பொழுது நாம் தங்கியிருக்கும் இந்த கிராமமும் நமது ஆட்சிக்கு உட்பட்டது தானே! இங்கேயே ஒரு வீட்டில் கொஞ்சம் உப்பு வாங்கிக் கொள்ள லாம் தானே! இந்த சின்ன விஷயத்துக்காக ஒரு சேவகனை அரண்மனைக்கு அனுப்பலாமா?'' என்றார். ராஜா நிமிர்ந்து பார்த்தார்.

''அமைச்சரே! நீங்கள் சொல்வது மாதிரி இங்கேயே வாங்கிக்கொள்ளலாம் தான்! இருந்தாலும் சாப்பாட்டுக்காக நான் இங்கே கொஞ்சம் உப்பு வாங்கினேன் என்று தெரிந்தால் போதும். நம்முடன் வந்திருக்கும் ஊழியர்கள் இந்த ஊரை அல்லவா வாங்கிவிடுவார்கள்!'' என்றாராம்.

பார்த்தீர்களா! இதிலிருந்து ஒரு ராஜாவாக இருப்பவர் அல்லது ஒரு கூட்டத்துக்குத் தலைவராக இருப்பவர் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தெரிகிறது. அவர் சிறிய தவறு செய்தாலும் அதையே ஆதாரமாக வைத்துக்கொண்டு அவருக்கு கீழே இருப்பவர்கள் பெரிய தவறுகள் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள்.

ஒரு மன்னருக்கு இருக்கவேண்டிய தகுதியில் இது மிக முக்கியம். அடுத்ததாக இருக்கவேண்டிய தகுதி வாக்கு தவறாமை! சொல்வது ஒன்றும், செய்வது ஒன்றுமாய் இருக்கக் கூடாது! இதற்கும் ஒரு கதை உண்டு.

ஒரு ராஜாவின் நண்பர் ஒருவர் அவரைப் பார்ப்பதற்காக வந்தார். ''அரசே! என்னுடைய பிள்ளைகளுக்கு தின்பண்டம் வாங்க வேண்டும். ஒரு ரூபாய் இருந்தால் கொடுங்கள்!'' என்றார்.

''சரி... நீ கேட்டபடி உனக்குப் பணம் தருகிறேன். ஆனால் அதற்கு முதல் ஒரு வில்வித்தைப் போட்டியை பார்த்துவிட்டு வருவோம், வா!'' என்று கூப்பிட்டார். இரு வரும் போட்டி நடை பெறும் இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

அங்கு பெரிய பெரிய ஆட்களெல்லாம் அம்புவிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் எந்த அம்பும் சரியான இடத்திற்குப் போய்ச்சேராமல் குறிதவறிப் போய்க்கொண்டிருந்தது. மன்னருக்குக் கோபம் வந்து விட்டது.

''என்ன இது? யாருக்குமே அம்புவிடத் தெரியவில்லையே!'' என்று சொல்லிக்கொண்டே ஒரு அம்பையும் வில்லையும் வாங்கி பக்கத்திலிருந்த நண்பரிடம் கொடுத்தார். ''நீ இந்த அம்பை விடு பார்க்கலாம்!'' என்றார். இவர் அம்பு எய்தார். அது குறிதவறாமல் போய் அந்தப் புள்ளியில் குத்தியது.

மன்னருக்குப் பெருமையாக இருந்தது. உடனே ஒரு நூறு ரூபாயை எடுத்து அவரிடம் அன்பளிப்பாகக் கொடுத்தார். போட்டியெல்லாம் முடிந்து அரண்மனைக்குத் திரும்பியதும் ''மன்னா... கொடுத்த வாக்குறுதியை மறந்து விட்டீர்களே!'' என்றார் நண்பர்.

''என்ன வாக்குறுதி?'' என்று கேட்டார் மன்னர், ஆச்சரியத்துடன்!

''ஒரு ரூபாய் தருவதாக சொன்னீர்கள்!'' என்றார் நண்பர்.

''அதுதான் நூறு ரூபாய் கொடுத்தேனே!'' என்றார் ராஜா.

அதற்கு அந்த நண்பர், ''கொடுப்பதாக வாக்களிக்காத நூறுரூபாய், கொடுப்பதாக வாக்களித்த ஒரு ரூபாய்க்கு ஈடாகாது. மன்னராக இருப்பவர் சொன்ன சொல்லை காப்பாற்ற வேண்டும். அதுதான் முறை!'' என்றார்.

ஒரு அரண்மனையில் விருந்து நடந்து கொண்டிருந்தது. அந்த ஊர் வழக்கப்படி ஒரு எலுமிச்சம் பழத்துண்டை எடுத்து அவரவர் தங்களது உணவில் பிழிந்தார்கள். முதலில் ஒருவர் பிழிந்தார். சாறுவரவில்லை. பின் ஒரு பெரிய பயில்வான் பிழிந்தார். ஒரு சொட்டுதான் வந்தது. சக்கையாகப் போய்விட்டது. கடைசியாக ஒரு நோஞ்சான் மாதிரி ஒருவர் அந்த சக்கையை எடுத்துப் பிழித்தார். ஏகப்பட்ட சாறு வந்தது!

எல்லோருக்கும் ஆச்சரியம்! கசக்கிப் பிழிவதில் இவ்வளவு கெட்டிக்காரராக இருக்கிறாரே! இவர் யார்? என்று விசாரித்தார் மன்னர். ''இவர்தான் நமது ஜனங்களிடம் வரி வசூல் பண்ணுபவர்!'' என்றார்களாம்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# நோர்வே தேசிய ஆவணக்காப்பகத்தில் கண்காணிப்புக்குழுவின் ஆவணங்கள்

## போர்நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் போர்நிறுத்த கண்காணிப்புக்குழு பணிபுரிந்த காலப் பகுதியில் தயாரிக்கப்பட்ட கோவைகள் மற்றும் தரவுகளை நோர்வே தேசிய ஆவணக்காப்பகத்தில் வைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தனது இணையத் தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த ஆவணங்களிலுள்ள இரகசிய தகவல்களைப் பொது மக்கள் பார்வையிட தடை விதிக்கப்படும் எனவும் அந்த தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கணக்குகள் உள்ளிட்ட அதிகாரபூர்வமானதும் உண்மையானதுமான தகவல்களை வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள கண்காணிப்புக் குழு, ஆய்வாளர்கள், மதிப்பீட்டாளர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட சகலருக்கும் சிறந்த தகவல் மூலமாக இது இருக்கும் எனவும் தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்தத் தகவல்கள் கண்காணிப்புக் குழுவின் இணையத் தளத்திலும் பதிவுசெய்யப்படும் எனவும் அந்த தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமையகத்தின் செயற்பாடுகள் ஒக்டோபர் மாதத்தில் முடிவுக்குக் கொண்டு வரப்படவுள்ளதாகவும், இந்த அறிக்கைகள் 2008 நவம்பர் மாதத்தில் தயாராகிவிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நோர்வேயில் ஓரிரு அதிகாரிகளுடன் தற்போது தனது செயற்பாட்டைக் கொண்டுள்ள இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தனது செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வரவுள்ளது. இதன் ஒரு ஏற்பாடாகவே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# கொழும்பில் குடிசைவீடுகள் இல்லையென வெளிக்காட்ட அரசாங்கம் அதீத முயற்சி

## அராஜக நடவடிக்கையென ஜே.வி.பி தெரிவிப்பு

கொழும்பில் குடிசை வீடுகள் இல்லையென வெளிக்காட்டிக் கொள்வதற்கு அரசாங்கம் அதீத முயற்சி மேற்கொண்டு வருவதாக ஜே.வி.பி. யின் நாடாளுமன்ற உறுப்பினர் லக் சுமன் நிபுணராச்சி தெரிவித்துள்ளார்.

சுமார் 30-40வருடங்கள் குறித்த பிரதேசத்தில் வசித்து வந்த மக்களை எவ்வித முன்னேற்பாடும் இன்றி வெளியேற்றியமைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் கொழும்பில் வீடுகளை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் வீடுகள் அமைக்கப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் சேரிகளோ குடிசை வீடுகளோ இல்லை என்பதை சார்க் தலைவர்களுக்கு வெளிக்காட்ட எடுக்கும் அதீத முயற்சியே இந்த அராஜக நடவடிக்கை எனத் தெரிவித்துள்ளார். எந்தவிதமான திட்டமிடலையும் மேற்கொள்ளாது குறித்த பிரதேச மக்களை திடீரென வெளியேற்ற மேற்கொள்ளும் முயற்சி கண்டிக்கப்பட வேண்டியதொன்றென லக்ஸ் மன் நிபுணராச்சி தெரிவித்துள்ளார். (அ)

# ஏழு பொருட்களுக்கான வலிச்சலுகை ஓகஸ்ட் முதல் நீக்கம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் குறிப்பிட்ட காலம் இருந்தவர்கள் நாடு திரும்பும் போது கொண்டுவரும் பொருட்களுக்கு வழங்கப்பட்டிருந்த வரிச்சலுகையை அரசாங்கம் நீக்குவதற்கு உத்தேசித்துள்ளது.

ஏழு பொருட்களுக்கான வரிச்சலுகை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் நீக்கப்படவுள்ளதாக சுங்க திணைக்களம் அறிவித்துள்ளது. இதன்படி 29 மற்றும் 32 அங்குல தொலைக் காட்சிப்பெட்டிகள், குளிரூட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், தன்னியக்க சலவை இயந்திரங்கள், ரெபிரிஜிரேடர்கள் நான்கு அடுப்புகளை கொண்ட காஸ், அடுப்புகள் ஆகிய பொருட்களுக்கு அளிக்கப்பட்டிருந்த வரிச்சலுகை நீக்கப் படவுள்ளது.

வெளிநாடுகளில் . குறிப்பிட்ட காலம் இருப்பவர்கள் நாடு திரும்பும் போது ஆயிரத்து ஐநூறு டொலர் பெறுமதியான பொருட்களை கொண்டு வருவதற்கு வரிவிதிக்கப் படுவதில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் குறிப்பிட்ட பொருட்களை எடுத்து வந்தால் அதற்கு வரி விதிக்கப்படும் என சுங்கப்பகுதியினர் தெரிவித்தனர்.

# இராசிபலன்

21.07.2008
(ஆடி 06, திங்கட்கிழமை)
அவிட்டம் முற்பகல் 8.04 மணிவரை
திருதியை பிற்பகல் 03.28 மணிவரை
இராகுகாலம் 7.31-09.01 மணிவரை
சுபநேரம்-12.01-01.31 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தொழில்லாபம், எடுத்த காரியம் கைகூடும், நல்லவரவேற்பு. |
| இடபம் | பிரபுத்தனம், இஷ்டசித்தி, நன்கொடை, மனமகிழ்ச்சி. |
| மிதுனம் | உத்தியோக பங்கம், பிரயாணம், குடும்பக்கவலை, கட்டுப்பாடு. |
| கடகம் | பொருள்விரயம், அஜீரணக் கோளாறு, வாகனபயம். |
| சிங்கம் | தெய்வசிந்தை, அபூர்வசந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி. |
| கன்னி | விரும்பிய பொருள் கிடைக்கும் வாய்ப்பு, நோய் குணமடையும். |
| துலாம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம். |
| விருச்சிகம் | தன்னம்பிக்கைக்குறைவு, ரோக நிலை, முயற்சி தாமதம். |
| தனுசு | மனோதைரியம், சுவாரஸ்யம், காரிய அனுகூலம், போசனநன்மை. |
| மகரம் | எடுத்த காரியம் தாமதமாகும், பொருள்விரயம், திடீர் நன்மை. |
| கும்பம் | தெய்வசிந்தை, போசனசுகம், புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | காரிய அலைச்சல், சோம்பல் நிலை, புத்திரரால் கவலை. |

வளவன்

# தமிழக மீனவர் மீதான தாக்குதலும் எல்லை தாண்டிய பயங்கரவாதமே

## தொல். திருமாவளவன் சாடல்

தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான தாக்குதல்களும் எல்லை தாண்டிய பயங்கரவாதமே என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் சாடியுள்ளார்.

சென்னையில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை நடைபெற்ற உண்ணாநிலைப் போராட்டத்தில் அவர் பேசியதாவது, ,

தி.மு.க.தலைவர் கருணாநிதி சரியான நேரத்தில் இந்த முடிவை எடுத்துள்ளார்: கச்சதீவை மீட்கும் காலம் நெருங்கி விட்டது. காஷ்மீரில் நடப்பது மட்டும் எல்லை தாண்டிய பயங்கர வாதம் இல்லை. இலங்கை அரசு தாக்குதல் நடத்துவதும் எல்லை தாண்டிய பயங்கரவாதம் தான். இலங்கை இராணுவத்தின் அத்து மீறல்களால் தமிழர்களுக்கு மட்டும் பாதிப்பல்ல இந்திய அரசுக்கும் ஆபத்து தான்.

இந்நிலையில் கச்சத்தீவை மீட்பதன் மூலம் தமிழர்களையும் இந்தியர்களையும் பாதுகாக்க முடியும். அதன் அடிப்படையில் தி.மு. க.நடத்தும் உண்ணாநிலைப் போராட்டம் பாராட்டுக்குரியது. தி.மு.க.எடுக்கிற எல்லா போராட்டத்துக்கும் விடுதலை சிறுத்தை கட்சி ஆதரவு அளிக்கும். இந்தப் பிரச்சினையில் அனைத்து கட்சிகளும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என்றார் அவர்.



கந்தர்மடம் பழம் வீதி அருள் மிகு ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் தேவஸ்தான அலங்கார உற்சவ தினங்களில் தெய்வீகப் பேருரை யாற்றிய மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தனுக்கு தேவஸ்தான பரிபாலனசபை சார்பில் சமாதான நீதிவான் இரா.தர்மகுலசிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

# சிறுவர்களை முழுமையான மனிதனாக உருவாக்க கல்வியையும் கலையையும் கற்றுக் கொடுங்கள்

## காரைநகர் கலாசார விழாவில் துணைவேந்தர் உரை

(காரைநகர்)

சிறுவர்களிற்கு கலை பயிற்றுவிப்பதி னூடாக அவர்களின் மனதை வளர்ச்சியடையச் செய்யமுடியும் என்று தெரிவித்துள்ளார் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் என். சண்முகலிங்கன்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் கலாசாரப் பேரவையின் கலாசார விழா நேற்றுமுன்தினம் காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ், முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக தொழிலதிபர்கள் இ.ச.பே.நாகரத்தினம், சீமாட்டி சற்குணராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

துணைவேந்தர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில், காரைநகரில் கலாசார விழாவில் கலந்துகொண்டது மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. காரைநகரின் ஆலயங்கள் பலவற்றிலும் இந்தியாவிலிருந்து நாதஸ்வர தவில் வித்துவான்களை அழைப்பித்து நாதஸ்வரக் கச்சேரிகளை நடாத்தினார்கள். இதன்மூலம் யாழ்ப்பாணத்திற்கே ஆத்ம பலம் பரவக்கூடியதாக இருந்தது. இதனால் அன்று வாழ்ந்தவர்கள் இன்பமாக வாழ்ந்தார்கள். எனவே தான் சிறுவர்களிற்கு ஏதாவது ஒரு கலையாவது கற்றுக்கொடுங்கள். பெரியவர்கள் ஒரு நாளைக்கு குறைந்தது அரை மணி நேரமாவது இசையை அல்லது கலையைக் கேளுங்கள் ,ரசியுங்கள்.

கலை வழியாக எங்களிற்கு ஒருவித மனப்பக்குவம் ஏற்படும். எம்மைச் சூழவுள்ள இன்னொருவரை வளர்க்கும். துன்பம் வரும் நேரத்தில் கலை ஒன்றினைக் கற்றால் அல்லது ரசித்தால் அந்த நேரமே துன்பம் விலகும். காரைநகர் உதவி அரச அதிபராக ஒரு கலைஞர் கிடைத்துள்ளார். இதனைப் பயன்படுத்தி இன்னமும் கலைகளை வளர்க்க ஆக்கபூர்வமாக முயற்சி மேற்கொள்ள வேண்டும். இந் நிகழ்வில் உறுதியாக ஒன்றைக் கேட்கின்றேன். சிறுவர்களிற்கு கல்வியைக் கொடுங்கள் அதே நேரம் கலையையும் கற்றுக்கொடுங்கள் அதன் மூலம் ஒரு முழுமையான மனிதனை உருவாக்கலாம் என்று மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ், வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உட்பட பலரும் உரையாற்றினர். (அ-246)




### வருடாந்த விளையாட்டுப் போட்டி

அல்ஹதீஜா முன்பள்ளி சிறுவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 12.30 மணிக்கு ஒஸ்மானியாக் கல்லூரியில் முன்பள்ளி தலைவர் ஜனாப் எம்.வி.எம் சியானாஸ் தாஹீர் தலைமையில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து மாலை பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (அ-6)

### பொருட் காட்சி

(யாழ்ப்பாணம்)

அல்ஹதீஜா முன்பள்ளி சிறுவர்களுக்கான பொருட்காட்சி நாளை மறுதினம் புதன் கிழமை காலை 10மணிக்கு அல்ஹதீஜா முன்பள்ளியில் ஆசிரியை சு.பௌசுல் நிஷாரா தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-6)

### ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்தவர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்து 24ஆம் திகதி முதல் தீவக வலய பாடசாலைகளில் கடமையேற்கவுள்ள ஆசிரியர்கள் தமது கடிதங்களை இன்றும், நாளையும், நாளை மறுதினமும் தீவக வலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.


### நெல்லியடி ம.ம.வித்தியாலயத்துக்கு கட்டம் அமைக்க நிதி

(வடமராட்சி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் புதிதாக இருமாடி வகுப்பறைக் கட்டடம் ஒன்றை அமைக்கவும் கல்லூரியில் முடிக்கப் படாதிருக்கும் கட்டடப் பிரார்த்தனை வேலைகளை பூர்த்திசெய்யவும் வடமாகாண கல்வி அமைச்சு 30இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

கட்டட வேலைகளை தனியார் கட்டட ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைப்பதற்கான கேள்விப்பத்திரங்களை வடமராட்சி கல்வி வலய பாடசாலைகள் வேலைகள் குழு கோரியிருப்பதாக வலயக்கல்விப் பணிப்பாளர் வை. செல்வராசா தெரிவித்துள்ளார்.

கட்டட வேலைகள் அடுத்த மாதம் ஆரம்பமாகும். (அ)




அகில இலங்கை தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதலாம் இடங்களைப் பெற்ற யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களில், பிரிவு 5 பேச்சுப் போட்டியில் முதல் இடம்பெற்ற செல்வன் ச.கோபிநாத்தை முதலாவது படத்திலும்,நடனம் பிரிவு 2 இல் முதலாம் இடம்பெற்ற த.கௌதமனை இரண்டாவது படத்திலும்,

நடனம் குழு 1 (திறந்த போட்டி)யில் முதலாம் இடம்பெற்ற மாணவர்களான கு.விதுர்ஷன், கி.கிருஷாந்தன், க.கிருஷாந்தன், செ.சனுஜன், ஜெ.சிந்தூரன்,க.கணாதீபன்,த.தயானிசன்,ஜெ.ஜதுநயன், சூ.கோபிநாத், உ.அரிஞ்சயன், க.கௌதமன், கு.கபிலன் ஆகியோரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## கலைஞர்கள் ஐவருக்கு கலாசார விழாவில் கௌரவம்

(காரைநகர்)

காரைநகரில் ஐந்து கலைஞர்களிற்கு அமரர் தி.மகேஸ்வரன் ஞாபகார்த்த விருது யாழ். மாவட்ட அரச அதிபரினால் வழங்கப்பட்டது.

காரைநகர் உதவி அரசாங்க பணிமனையில் கலாசாரப் பேரவையின் கலாசார விழா நேற்று முன்தினம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந் நிகழ்வின் ஓர் அம்சமாக மூத்த கலைஞர்கள் கௌரவிப்பும் இடம்பெற்றது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தியாகராஜா மகேஸ்வரன் ஞாபகார்த்த விருதிற்கென ஐவர் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இவர்களுள் கலாநிதி சிவசிறி க.வைத்தீஸ்வரக் குருக்களிற்கு கலைஞான சுடர்விருது வழங்கப்பட்டது. கவிஞர் சிவசரணபவன் (சிற்பி), கல்வயல் கவிஞர் வே.குமாரசாமி, தவில் வித்துவான் கை.வீராசாமி, நாதஸ்வர வித்துவான் க.பவப்பிரியன் ஆகியோர் கலைச் சுடர் விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவர்கள் ஐவருக்குமான விருதுகளை கலாசார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் வழங்கிக் கௌரவித்தார். (அ-246)

### உளவளத்துணை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் பயிற்சி பெற்ற உளவளத்துணை ஆசிரியர்களுக்கான மாவட்ட மட்ட கலந்துரையாடல் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற உள்ளது.

இக்கலந்துரையாடலிற்கு மேற்குறித்த பயிற்சி பெற்ற யாழ்மாவட்ட சகல உளவளத் துணை ஆசிரியர்களும் தவறாது பங்குகொள்வதோடு கோட்ட ரீதியாக ஸ்தாபிக்கப்பட்ட உளசமூக நிலையங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் அறிக்கைகளுடன் வருகை தருமாறு மாகாண அடிப்படை கல்வித்துறை அலகின் நிர்வாக அலுவலர் கேட்டுள்ளார். (அ)

### 'சாந்தனது எழுத்துலகம்' நூல் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில மொழித்துறை விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசனின் தொகுப்பில் உருவான "சாந்தனது எழுத்துலகம்" நூல் அறிமுகவிழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் எஸ்.பத்மநாதன் (சோபா) தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், கௌரவ விருந்தினர்களாக வாழ்நாட் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை , யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நூல் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக ஆங்கில மொழித்துறை தலைவர் எஸ். சுந்தரேஸ்வரன், வணபிதா கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் நிகழ்த்துவர். (அ-6)

### வாக்காளர் இடாப்பு பதிவுகள் 23 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வாக்காளர் இடாப்பில் பெயர் பதிவு செய்யும் பணிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாக யாழ்ப்பாணம் தேர்தல் திணைக்கள வட்டாரம் தெரிவித்துள்ளது.

2007 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புகளை பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், கிராமஅலுவலர் அலுவலகங்கள் மற்றும் யாழ்.செயலகம் ஆகிய இடங்களில் பார்வையிட முடியும். கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் விசேட திட்டத்தின் கீழ் வாக்காளர்களை இணைக்கவும் நீக்கவும் மட்டுமே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதுதொடர்பான பயிற்சிகள், விளக்கங்களைப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு தேர்தல் அலுவலக அதிகாரிகள் நேரில் சென்று வழங்கி வருகின்றார்கள். இதேவேளை வாக்காளர் இடாப்பு பதிவு விடயம் சம்பந்தமாக எந்தவொரு பொதுமகனையும் அலைக்கழிக்க வேண்டாம் எனவும் கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

31.06.2008இல் 18வயதைப் பூர்த்தி செய்தவர்கள் தமது பெயர்களை கிராம அலுவலர் அலுவலகங்களுக்குச் சென்று உரிய படிவங்களைப் பூர்த்தி செய்வ தன் மூலம் இணைத்துக்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.எதிர்வரும் காலத்தில் இடம்பெறும் தேர்தல் களில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை முக்கியம் என்பதும் இங்கு சுட்டிக்காட்டக்கூடியதாகும். (அ)



யாழ்.போதனா வைத்தியசாலையில் சிறுவர் பூங்காவில் அமைக்கப்பட்ட புதிய நந்தவனத்தை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் க.கணேஷ் நாடா வெட்டி திறந்து வைப்பதையும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன், வைத்தியகலாநிதி அருள்மொழி ஆகியோர் உரையாற்றுவதையும். பிரதம விருந்தினர் புதிய நந்தவனத்திற்கு அழைத்து வரப்படுவதையும் மற்றும் சிறுவர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை 43



### தனியாட்சி முறை

ஆள்பதி மெயிற்லன் அவர்களுக்கு வாழ்க்கை என்றால் வேலை என்றதே இலட்சியமாய் இருந்தது. எனவே அவர் இலங்கையின் நிலைமைக்ளை நன்கறிதற் பொருட்டு ஆங்கிலேயருக்குச் சொந்தமான கரை நாடுகளைச் சுற்றிப் பார்த்துத் தமக்குத் தேவையான முன்னறிவைப் பெற்றுக்கொண்டார். அவர் படை நுணுக்கந் தெரிந்தவராயிருந்த போதிலும் கண்டி மீது படை எடுக்கத் துணியவில்லை. பரிபாலனத்தை நல்ல வழியில் நடத்துவதற்கு இன்ன இன்ன செய்தல் வேண்டும் என்று கூறும் பெரியதோர் அறிக்கையில் பல காரியங்களை எடுத்து தகவுரை கூறி குடியேற்ற மந்திரியாருக்கு அனுப்பினார். அவர் காட்டிய வழிகளால் இலங்கை அரசாங்கத்துக்கு ஆண்டுதோறும் 300000 பொன் மிச்சம் ஏற்பட்டது என்பர்.

ஆள்பதி என்ற கௌரவத்தால் தமக்கு பல காரியங்களைச் செய்வதற்கு அதிகாரம் உண்டு எனக் கூறிய மெயிற்லன் அவர்கள் உண்மையில் தீவிரமாக பல காரியங்களைச் செய்ய ஆரம்பித்தார். ஆள்பதி நோத் அவர்கள் ஆராய்வின்றி நீக்கிய ஊழிய முறை இலங்கைக்கு இன்றியமையாதது என மெயிற்லன் கருதி அதனை மீள நடைமுறையில் கொண்டு வந்தார். அவருக்கு உதவியாயிருந்த அலெக்சாண்டர் யோண்ஸ்ரன் அவர்கள் சுதேச மொழிகளை நன்கறிந்து பரிபாலனத்துக்குத் தேவையான அலுவல்களைச் செய்வதில் பெரும் பங்கெடுத்தார். அவர் சுதேசிகளும் மேலுத்தியோகத்தில் அமர்த்தப்பட வேண்டும் என்று தகவுரை கூறினார். இக் காலத்தில் தான் இங்கிலாந்தில் ஒரு குற்றவாளி நீதிமன்றத்தில் விசாரிக்கப் படாமல் சிறையிடப்படக்கூடாது என்ற சட்டம் நடைமுறையில் வந்தது. அச் சட்டம் இலங்கையிலும் நடைமுறையில்இருத்தல் வேண்டும் என வழிவகுத்தவர் அலெக்சாண்டர் யோண்ஸ்ரன் அவர்களே. இன்னும் விசாரணையின் போது யூரிகள் எனப்படும் நடுவர் முன்னிலையில் வழக்குகள் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் யோண்ஸ்ரன் வழிவகுத்தார்.

### மீள் பார்வை


ஆள்பதி மெயிற்லன் அவர்கள் ஆள்பதி பொறுப்பேற்கும் முன் இங்கிலாந்திலே குடியேற்ற மந்திரியாரின் அலுவலகத்திலே முன்னர் ஆள்பதி நோத் அவர்கள் இலங்கை அரசியல் சம்பந்தமாக எழுதிய அறிக்கைகள் குறிப்புக்கள் என்பவற்றைக் கருத்துடன் படித்து வந்தார். அவர் இயற்கையாகவே எதனையும் நுணுகியாராயும் மெய்யுணர்வாளராய் இருந்த படியால் நாட்டின் நிலைமைகளை நேரிற் சென்று கண்டு அனுபவம் பெற்றார். அவர் ஆங்கிலேயர் ஆட்சியை இலங்கையில் நிலைபெறச் செய்வதற்கு வழிவகுத்த போது முதலியார்களின் அதிகாரம் இடையூறாய் இருந்ததை உணர்ந்தார். முதலியார்கள் பரிபாலனத்துறையிலும் வருமானத் துறையிலும் நீதி வழங்குந் துறையிலும் பொலிசுக்காரர் போல நாட்டைக் காவல் செய்யும் துறையிலும் தோம்புகள் என்ற பதிவேடுகளைப் பாதுகாக்கும் துறையிலும் பிரதான பங்குள்ள வர்களாய் மிக வலுவுள்ள அதிகாரம் உள்ளவராய் இருந்தார்கள் அவர்களுடைய அதிகாரம் ஆள்பதி அவர்கள் வசனத்தில் கூறப்படின் அரசாங்கத்துள் ஓர் அரசாங்கமாகவே இருந்தது. அவர்கள் சிவில் சேவையாளரான உயர் உத்தியோகத்தர் மேலும் பொது மக்கள் மேலும் அதிக செல்வாக்குள்ளவராய் இருந்தார்கள். அவர்களுடைய இருமொழிப் புலமை அவர்களை அதிகாரத்தில் இருத்தியதோடு அரசாங்கத்தின் திறமான அமைப்புக்கு இடையூறாகவும் இருந்தது.

என வே ஆங்கிலேயர் அதிகாரத்தை இலங்கையில் வேரூன்றச் செய்வதையே பிரதான வேலையாகக் கருதி வந்த மெயிற்லன் அவர்கள் முதலியார்களின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் குறைப்பதற்கே முதலில் வழிவகுப்பாராயினார். அவ்வாறு செய்வதும் சாவதானமாக முரண்படாமல் பகைக்காமல் செய்ய வேண்டும் என எண்ணினார்.எனவே முதலில் உயர்தர உத்தியோகத்தரைச் சிங்களம் அல்லது தமிழ்மொழியைக் கற்று பொதுமக்களுடன் நேரில் தொடர்புகொள்ள செய்தார். அவர்களை நாடுகளுள் சென்று மக்களோடு நேரில் தொடர்பு கொண்டு அவர் பிரச்சினைகளைச் அறியச் செய்தார். இதுகாறும் சின்ன விதானைமாரையும் வட்டவிதானைமாரையும் முதலியார்களே நியமிக்கும் பொறுப்பை நீக்கித் தாமே அந் நியமனங்களை மேற்பார்வை செய்தார். பறங்கியருள் படித்தவர்களை சிறு நீதிமன்றங்களில் நீதிபதிகளாக நியமித்தார். அதனால் முதலியார்கள் நீதிவழங்கும் அதிகாரத்தை இழக்க வேண்டியவராயினர். இன்னும் பொலிசு விதானைமார் என்ற உத்தியோகத்தரை நியமித்த முதலியார்களின் செல்வாக்கைக் குறைத்தார். விதானைமார் சிவில் உத்தியோகத்தரின் கீழ் வேலை செய்யவும் முதலியார்கள் சம்பளம் பெறும் உத்தியோகத்தராய் அரசாங்கத்துக்குப் பணிவுள்ளவராய் கடமையாற்றவும் வழிவகுத்தார்.

**க.சி.குலரத்தினம்**

இன்னும் புத்த சமயத்தவர் குருமாரும் பிராமணக் குருமாரும் நாட்டில் செல்வாக்குப் பெற்றால் முறை தவறாகும் எனக் கருதி அது காறும் ஒல்லாந்த அதிகாரிகளால் கத்தோ லிக்கர் மேல் விதிக்கப்பட்டிருந்த தண்டச் சட்டங்களை நீக்கிக் கத்தோலிக்கருக்குச் சுதந்திரம் வழங்கினார் அதனால் கத்தோலிக்கப் பெரியார் தமது அரசாங்கத்தை ஆதரிக்க வழிவகுத்தார். (தொடரும்)





தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய பெற்றோர் தினவிழாவில், பிரதம விருந்தினரான வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும், மாணவர்கள் சிங்களப் பாடல் இசைப்பதையும், நாடக நிகழ்வின் ஒரு காட்சியையும், இந்நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-குரு)

# எதிர்கால நோக்கில் ஆரம்பக்கல்வி 4

இலங்கையில் நாட்டின் பொருளாதார நிலையைக் கவனத்திற் கொண்டு செயற்படும் அரசானது கல்வியினூடாக பொருளாதார உயர்விற்கு வழிதேடும் நிலையைக் கருத்திற் கொண்ட போதும் அது தொடர்பான சிறந்த ஆளணியினரைக் கல்வியினூடாக உருவாக்க அதிநீண்டகாலம் எடுக்கும் என்ற அடிப்படையில் செயற்பட்டு வந்தது.

### ஆரம்பப் பாடசாலையில் மாணவர் அனுமதி

பாடசாலைகள் எச்சமூகத்தில் அமைந்துள்ளதோ, அச்சமூகத்தின் குறுகிய, நீண்ட கால நோக்கங்களைக் கருத்திற்கொண்டு செயற்படுதல் வேண்டும்.

இன்று நகர மயமாக்கல் என்ற மாற்றங்கள் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப் படுகின்றன. கல்வி தொடர்பான விழிப்புணர்வு எல்லாச் சமூக மட்டங்களிலும் தோன்றியுள்ளன.

இதனால் நகரங்களை நோக்கிய இடப்பெயர்வுகள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இந்நிலையில் மக்களில் ஒரு பகுதியினர் நகரப்புறத்தை நோக்கி தம் வாழ்க்கை வசதிகளை அமைத்துக் கொண்டார்கள்.

இந்நிலையில் இன்று பொதுவாக தம் பிள்ளைகளின் கல்வியின் மீது அக்கறை உடையவர்களான பெற்றோர்கள் தம் பிள்ளைகளை பிரபல்யமான பாடசாலையில் சேர்த்து கல்வி கற்பிப்பதற்கு முன் வருகின்றார்கள். இதனால் நகர்ப்புறப் பாடசாலைகள் மத்தியில் இடநெருக்கடி ஏற்படுகின்றது. இன்று ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் பிள்ளைகளின் சித்தி விகிதத்தை அதிகமாகக் கொண்ட பாடசாலைகள் மாணவரை உள்வாங்குவதில் இத்தகைய இடர்பாடுகளை எதிர்கொள்கின்றன.

ஒரு ஆசிரியருக்கு முப்பத்தைந்து மாணவர்கள் என்ற அனுமதியினால் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்நிலையில் ஆசிரியருக்கு அது பெரும் பிரச்சினையாக அமைந்து விடுகின்றது.

**கலாநிதி திருமதி ஜெயலட்சுமி இராசநாயகம்**
**கல்வியியற்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாணம்.**

இதனால் தனி மாணவன் மேல் கவனம் எடுப்பது சிரமமாகியும் விடுகின்றது. இதனால் கட்டடங்கள், தளபாடங்கள், கற்பித்தல் உபகரணங்கள், இடவசதிகள் மேலதிக ஆசிரியர்கள் போன்றவைகளின் செலவை ஈடுசெய்ய முடியாமல் பாடசாலை நிர்வாகம் பெரும் பிரச்சினையை எதிர்கொள்கின்றது.

இக் கட்டத்தில் ஒரு பாடசாலைக்கு அரசும், ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் வழங்கும் உதவிகள், நன்கொடைகளை விட மேலதிகச் செலவுகள் ஏற்பட இடமுண்டு. அந்நிலையில் பிள்ளைகளை பாடசாலையில் சேர்க்கும்போது பெற்றோர்களால் பாடசாலைக்கு வழங்கப்படும் நன்கொடைப் பணமும் பாடசாலைகளின் மேலதிக அவசரமான தேவைகளை நிறைவு செய்கின்றன.

பிள்ளைகளைக் கூட ஒரு ஆசிரியர் வகுப்பில் வைத்துக் கற்பிக்கும் நிலையும் ஏற்படுகின்றது.

இதனால் ஆசிரியர்கள், மாணவர்கள் உடல்நலம் பாதிக்கப்படுவதோடு உளநலத்திலும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்நிலையில் பரீட்சைகளைக் கூடச் சரியான முறையில் திட்டமிட்டு நடத்துவது இயலாமற் போய்விடுகிறது.

இன்று சில பாடசாலைகள் மாணவர் அனுமதியைக் கட்டுப்படுத்துவதற்காக வாய்மொழிப் பரீட்சை (Oral Exam) எழுத்துப் பரீட்சை (Written Exam) போன்றவைகளின் அடிப்படையில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்கின்றன. இன்று பிள்ளைகள் முன்பள்ளிகளிலும் கல்வி நிலைகளில் சிறந்து விளங்குவதால் இத்தகைய பரீட்சைகளுக்கு முகம் கொடுக்கும் வகையில் தயார்ப்படுத்தப்படுகின்றார்கள். அதேபோன்று சில பாடசாலைகளில் அவர்களுக்கு மூத்த சகோதரர் அங்கு படிக்கின்ற நிலைலோ அல்லது பெற்றோர் பழைய மாணவர்களாக இருக்கும் நிலையிலோ குறிக்கப்பட்ட பாடசாலையின் அனுமதியை பெறுவதில் சில நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேபோன்று சில பகுதிகளில் ஆரம்பப் பாடசாலைகள் எண்ணிக்கையில் ஓரளவு கணிசமான அளவு இருந்தபோதிலும் பௌதீக, மனித வளங்களையுடைய பாடசாலைகளும் சிறந்த கல்விப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டு வருகின்ற பாடசாலைகளும் மாணவர் அனுமதி தொடர்பாக பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. எனினும் மாணவர் எண்ணிக்கைக்கேற்ப கட்டடங்களோ, ஆசிரியர்களோ இல்லாத பட்சத்தில் 50,60ற்கு மேற்பட்ட (தொடரும்)


உதைபந்தாட்ட நாயகன் அமரர் தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம் அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவாக

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும்

உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி -2008

இன்று

- நக்கீரன் எதிர் நவசக்தி
- கரவை சுடர் எதிர் யங்கம்பன்ஸ்

மைதானம்:வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுத்திடல்

# சார்க் மாநாட்டை முன்னிட்டு தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள்

## இந்திய, ஆப்கான் தலைவர்களுக்கு உயர்மட்ட பாதுகாப்பு

(கொழும்பு)

சார்க் மாநாட்டுக்கு வருகை தரவுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் ஆப்கானிஸ் தான் ஜனாதிபதி ஹமித் ஹர்சாய் ஆகிய இருவருக்கும் உச்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதே நேரம் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானிக்கும் போதியளவு பாதுகாப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கிற்கான பாதுகாப்பை இந்திய அரசின் கறுப்பு பூனை படை பொறுப்பேற்கவுள்ளது. இதற்காக இந்தியாவிலிருந்து ஏற்கனவே ஒரு தொகுதி இந்தியப்படையின் நிபுணர்கள் குழு கொழும்பை வந்தடைந்துள்ளது .

மேலதிகமாக நூற்றுக்கணக்கான கறுப்பு பூனை படைப்பிரிவும் விரைவில் கொழும்பை வந்தடையவுள்ளது. அத்துடன் இந்திய போர்க் கப்பல்களும் உலங்குவானூர்திகளும் நவீன தொழில்நுட்ப பாதுகாப்பு கருவிகளுடன் கொழும்பிற்கு வருகை தரவுள்ளன.

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் ஹர்சாய்குரிய பாதுகாப்பை தனியாருக்குச் சொந்தமான சர்வதேசபாதுகாப்பு முகவர் நிறுவனம் பொறுப்பேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் படியே ஆப்கானிஸ் தான் ஜனாதிபதி ஹமீத் ஹர்சாய்குரிய பாதுகாப்பு சர்வதேச பாதுகாப்பு முகவர் நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச பாதுகாப்புமுகவர் அமைப்பின் பாதுகாப்பு குழு விரைவில் கொழும்பை வந்தடையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானிக்குரிய பாதுகாப்பை பாகிஸ்தான் புலனாய்வுபிரிவினர் பொறுப்பேற்றுள்ளனர்.

பாகிஸ்தான் புலனாய்வு பிரிவினரும் அடுத்தவாரம் கொழும்பை வந்தடைவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மூன்று தலைவர்களும் தங்கும் விடுதிகள் மற்றும் அவர்களது போக்குவரத்து பாதைகள் ஆகியவற்றில் தத்தமது பாதுகாப்பு பிரிவினரே கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று மேற்படி மூன்று நாடுகளினதும் பாது காப்பு அதிகாரிகள் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மூவர் தவிர ஏனைய தலைவர்களுக்கான பாதுகாப்புப் பணிகளை இலங்கையே பொறுப்பேற்கும் என்றும் தெரிய வருகிறது.

அதே வேளை சார்க் மாநாட்டிற்கு வருகை தரும் நாட்டு தலைவர்களின் தனிப் பட்ட சந்திப்புகளுக்கு கல்கிசையிலுள்ள பிரபல விடுதியை உபயோகப்படுத்தலாம் என்று அரச தரப்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையை இந்திய பாதுகாப்பு நிபுணர்கள் நிராகரித்துள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பயணப்பாதை பாதுகாப்பானதல்ல என்று தெரிவித்தே இந்த கோரிக்கையை அவர்கள் நிராகரித்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனையடுத்து சார்க் நாட்டு தலைவர்கள் தமது தனிப்பட்ட சந்திப்புகளை நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடத்துவதற்கு அரசு இணக்கம் தெரிவித்திருக்கிறது.

சார்க் மாநாடு நடைபெறும் போது கொழும்பு நகரின் பாதுகாப்பை இந்தியப் படையிடம் ஒப்படைக்குமாறு இலங்கை அரசிடம் இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளதாக பிறிதொரு தகவல் தெரிவிக்கின்ற போதும் அதனை உறுதிசெய்து கொள்ள முடியவில்லை.

இதேவேளை சார்க் மாநாட்டை முன்னிட்டு கட்டுநாயக்க கொழும்பு துறைமுகப் பகுதி, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வலயப் பகுதி, நாடாளுமன்ற வளாகப்பகுதி ஆகிய நான்கு இடங்களும் உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம் காலிவீதியில் பம்பலப்பிட்டியுடன் காலி வீதியூடான போக்குவரத்து எதிர் வரும் 31ஆம் திகதி முதல் 3ஆம் திகதி வரை நிறுத்தப்படுவதுடன் ரயில் போக்குவரத்து மருதானைவரை மட்டுப் படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர கொழும்பில் சார்க் நாடுகளின் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் பயணம் செய்யும் வீதிகளில் பொதுமக்களின் போக்குவரத்திற்கு தடைவிதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்கையில்,

சார்க் மாநாட்டை முன்னிட்டு கொழும்பிலுள்ள பிரதான இடங் களில் வீதியோரங் களிலுள்ள வீடுகள் வர்த் தக நிலையங்கள் போன்றனவற்றின் சுவர்களுக்கு வர்ணம் பூசுமாறு அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கொழும்பு மாநாகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் இத்தகைய அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## லண்டனில் வன்முறையில் ஈடுபட்ட 6 இலங்கையர்களுக்குச் சிறைத்தண்டனை

(கொழும்பு)

லண்டனில் வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 6 இலங்கையர்களும் இந்தியப் பிரஜை ஒருவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாக இந்திய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொலை முயற்சி குற்றச் சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கபட்டுள்ளது.

இந்த நிலையில் இவர்களுக்கு 3 முதல் 12 ஆண்டுகள் வரையான சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதென லண்டன் காவற்துறையினர் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ)

## கொஹுவளையில் கொள்ளையரை பொதுமக்கள் மடக்கிப்பிடித்தனர்.

(கொழும்பு)

ஒருவர் பொலிஸ் சீருடையிலும் மூவர் சிவில் உடையிலும் சோதனை நடத்தப்போவதாகக் கூறி வீடுடொன்றில் நுழைந்து கொள்ளையிட்டு தப்பிச்செல்ல முயன்ற வேளை இரண்டு கொள்ளையர்களை பொதுமக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று கொஹுவளையில் முதலி மாவத்தையில் உள்ள வீடுடொன்றில் வெள்ளியன்று இடம் பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது ,

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒன்றரை மணியளவில் குறித்த வீட்டில் மூன்று பெண்கள் மாத்திரமே இருந்துள்ளனர். அவ்வேளை அங்கு வந்த 4 பேர் வீட்டை சோதனையிட வேண்டும் எனக்கூறியுள்ளனர். அவர்களில் ஒருவர் பொலிஸ் பாணியிலான சீருடை அணிந்து காணப்பட்டுள்ளார்.

மேல் மாடிக்குள் உரிமையாளரின் மனைவியை அழைத்துச்சென்று சோதனை நடத்தியுள்ளனர். கீழ் மாடியில் இருந்த வீட்டு உரிமையாளரின் தங்கையின் தாலிக்கொடியை ஒருவர் கழற்ற முயற்சித்துள்ளார். இதனையடுத்து அவர் அபயக்குரல் எழுப்பியுள்ளனர்.

இதனையடுத்து அந்த நால்வரும் கையில் கிடைத்த ஆபரணங்களுடன் வீட்டை விட்டு வெளியே தப்பி ஓட முயன்றுள்ளனர். இரண்டு பேர் தங்க ஆபரணங்களுடன் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓட இரண்டு பேர் பொது மக்களினால் பிடிக்கப்பட்டனர். அவர்களிடமிருந்த சில தங்க ஆபரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவ் இருவரும் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓட முயன்ற போதும் மோட்டார் சைக்கிள் இயங்க வில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் நடந்த இடத்திற்கு வந்த பொலிஸார் கைவிரல் அடையாளங்களை பதிவு செய்துள்ளனர்.

தற்போது பொலிஸ் காவலில் உள்ள இருவரில் ஒருவர் பாதுகாப்புப்படையில் இருந்து தலைமறைவாகத் திரிபவர் எனத் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கொஹுவளைப் பொலிஸார் தப்பிச்சென்ற இரண்டு பேரை கைதுசெய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

வீட்டு உரிமையாளர் கதிர்காமம் சென்றதை அறிந்து இக்கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்ட முயற்சித்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (அ-6)

## கறுப்பு ஜுலை ஆர்ப்பாட்டங்களை தடுக்க வேண்டுமாயின் புலி முத்திரை களையப்படவேண்டும்- ஜே.வி.பி


(கொழும்பு)

கறுப்பு ஜுலை சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐரோப்பா முழுவதிலும் தமிழீழ விடுதலைப்புலிகளினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டங்களைத் தடுப்பதற்குத் தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள புலி முத்திரை நீக்கப்பட வேண்டும் என ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளார்.

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் தமக்கு எதிராக சுமத்தியுள்ள புலி முத் திரையை நீக்கா விட்டால் தமிழீழ விடுதலை ப்புலிகளுக்கு ஆதரவு வழங்குவோர் யார் என்பதை விரைவில் அம்பலப்படுத்த நேரிடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மாகாணசபைகளை விட தேசிய அரசியல் பற்றிக் கவனம் செலுத்த வேண்டிய நேரம் உருவாகியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசியர்கள் , மாணவர்களுக்கு சீருடை மற்றும் பாடநூல்கள் நாவலர் கலாசார மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது. நிகழ் வில் மருதடி விநாயகர் அறநெறிப்பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கு இந்து கலா சார உத்தியோகத்தர் புரந்திரன் சீருடை வழங்குவதை படத்தில் காணலாம்.

## ஈரானின் அணுத்திட்டம் குறித்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றமில்லை

(ஈரான்)

ஈரானின் அணு சக்தி திட்ட சர்ச்சைக்கு தீர்வு காணும் விதமாக சனிக்கிழமையன்று ஜெனீவாவில் உலக வல்லரசு நாடுகள் பங் கேற்ற கூட்டம் நிறைவடைந்துள்ள நிலையில், அக்கூட்டத்தில் பங்கேற்ற ஐரோப்பிய ஒன் றியத் தூதர் ஹாவியர் சொலானா ஈரானியர்கள் தங்களுக்கு தெளிவான பதில் எதனையும் தர வில்லை எனத் தெரிவித்துள்ளார்.

ஈரான் அணுசக்தி விவகாரம் தொடர்பான கூட்டத்தில் முதல் முறையாக இத்தடவைதான் அமெரிக்கா பங்கேற்றியிருந்தது. அமெரிக்க அரசுத் துறையின் மூத்த அதிகாரி வில்லியம் பர்ன்ஸ் இதில் பங்கேற்றிருந்தார்.

பொருளாதார சலுகைகளைப் பெற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக தமது யுரேனியம் செறிவாக்கல் செயற்பாடுகளை கைவிடுவது என்ற கோரிக்கையை தாங்கள் மீண்டும் நிராகரிப்பதாக ஈரான் சார்பாக பேச்சுகளில் கலந்து கொண்டவர் தெரிவித்திருந்தார்.

ஈராக்கின் பிரதான சுனி முஸ்லிம் குழுவினரான ஈராக் ஒன்றுப்பட்ட முன்னணியினர் மீண்டும் ஈராக் அரசாங்கத்தில் இணைகின்றனர்.

ஒரு வருடத்திற்கு முன்பு தான் அதிகாரப் பங்கிடல் தொடர்பான சர்ச்சையினால் இவர்கள் விலகி கொண்டனர்.

ஈராக்கில் தேசிய ஒற்றுமை கொண்ட அரசாங்கத்தினை உருவாக்குவதில் ஏற்பட்டிருக்கின்ற முக்கியமான முன்னேற்றம் இதுவென்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக ஈராக்கில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதோடு, மன்னிப்பு சட்டம் ஒன்றின் மூலமாக சுனி சிறைக் கைதிகள் பலர் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த ஓராண்டு காலமாக ஈராக் அமைச்சரவையில் சுனி அரபு பிரதிநிதிகள் இடம் பெற்று இருக்கவில்லை. இதற்கிடையே ஈராக்கில் பிரிட்டிஷ் படைகள் நிலை கொண்டிருக்கின்ற தென்பகுதியில்பாதுகாப்பு நிலைமை முன்னேறி இருப்பதாக பிரிட்டன் பிரதமர் கோர்டன் பிறவுன் தெரிவித்துள்ளார். (அ)

## பயங்கரவாதிகளின் தாக்குதலில் காஷ்மீரில் 9 இராணுவம் பலி

இந்தியாவின் நிர்வாகத்திற்கு உட்பட்ட காஷ்மீரில் பிரிவினைவாத பயங்கரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் இந்திய இராணுவத்தினரில் குறைந்தது 9பேர் கொல்லப்பட்டுள்ளதாக இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீ நகருக்கு வடக்கே இருக்கின்ற நர்பல் பகுதியில் துருப்புகளை ஏற்றி சென்ற பேருந்து குண்டு வெடிப்பில் சிக்கிய இச் சம்பவத்தில் மேலும் இருபத்து மூன்று பேர் காயம் அடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

காயம் அடைந்தவர்களில் ஒரு சிலர் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர். இந்த சம்பவத்திற்கு எந்த் பிரிவினரும் இதுவரையில் உரிமை கோரவில்லை.

சர்ச்சைக்குரிய காஷ்மீர் பகுதியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சிகள் குறித்து இந்தியா மற்றும் பாகிஸ்தானை சேர்ந்த உயரதிகாரிகள் ஆலோசனை நடத்திய ஓர் தினத்திற்கு பின்னர் இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது. (அ)

# ஐரோப்பிய நீதிமன்றத் தீர்ப்பும் ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பும்

இலங்கைத் தமிழர்களின் அரசியல் அந்தஸ்து கோரும் விடயத்தில் ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பிரித்தானியாவின் கடும் போக்கிற்கு ஐரோப்பிய நீதிமன்றமானது கடிவாளம் போட்டுவிட்டதாகப் பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகள் நம்புகின்றனர்.

இன்றைய நிலையில் இலங்கை அகதிகள் நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்படலாம். கைதுகள், கொலைகள், கடத்தல்கள் இல்லை என்று ஒரு புறம் கூறிக்கொண்டு மறுபுறம் பிரித்தானியர்களாகிவிட்ட இலங்கை தமிழர்களை இன்றைய சுழலில் இலங்கைக்குச் செல்ல வேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருப்பதுதான் பிரித்தானிய அரசின் வேலையாகி விட்டது.

சிம்பாப்வே நாட்டில் நடப்பது மட்டும்தான் மனிதப் படுகொலைகள். இல்ங்கையில் நடப்பது மோசமானது அல்ல. என்று அமெரிக்க நலன்களைப் பாதுகாக்க துதிபாடிக் கொண்டிருக்கும் பிரித்தானிய அரசு, பலவிதமான சங்கடங்களுக்கு ஆளாகி உயிர் தப்பி வந்த தமிழர்களின் அரசியல் அந்தஸ்து கோரிக்கைகளை நிராகரித்து அவர்களை இலங்கைக்கு அனுப்ப முயற்சித்து வருவதும் தெரிந்ததே.

வழக்கினால் பாதிக்கப்பட்ட-நிராகரிக்கப்பட்ட அகதி அந்தஸ்து பெற முயற்சித்தவர்களுக்கு எல்லாம் பழம் நழுவிப் பாலில் விழுந்து விட்டதாகச் சிலர் கொக்கரிக்கத் தொடங்கிவிட்டனர். இதற்கான விளக்கமும் இதன் அடிப்படையில் என்ன நடைபெறப்போகின் றது என்பதும் மூன்றுமாத காலத்துக்குள் தெரிய வரும். அந்தமூன்றுமாதகாலஎல்லையில் பிரித்தானிய அரசாங்கம் ஐரோப்பிய நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் பிரித்தானிய அரசு Na v the United Kindom என்ற வழக்கின் தீர்ப்பிற்கு கட்டுப்பட்டு இலங்கை அகதிகள் விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

07 நீதிபதிகள் முன்னர் நடைபெற்ற இவ் வழக்கில் Aire என்ற நிறுவனத்தின் சார்பில் செல்வி மோல் என்பவரும், உள்நாட்டுத் திணைக்களத்தின் சார்பில் வால்டன் என்பவரும் ஆஜராகினர். இவ்வழக்கின் விண்ணப்பதாரி தனக்கு ஐரோப்பிய மனித உரிமைச் சட்டத்தின் பிரிவுகள் 2-3இன் கீழ் தான் திரும்பிச் சென்றால் உயிருக்கு ஆபத்துள்ளது என்றே வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

25.06.2007 இல் தலைமை நீதிபதி இந்த வழக்கை ஐரோப்பிய சட்டம் Rule 39 இன் கீழ் பயன்படுத்தி இலங்கைக்கு விண்ணப்பதாரியை அனுப்பக்கூடாது என்றும் அவரின் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பரிசீலனைக்குத் தகுதியானவை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

விண்ணப்பதாரி 1975இல் இலங்கையில் பிறந்த தமிழர் லண்டனில் வசித்துவருகின்றார். 17.06.1999இல் லண்டனுக்கு வந்து அரசியல் அடைக்கலம் கோரியிருந்தார். 1990-1997க்கு இடையில் இலங்கை இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டார். இவரது அரசியல் அடைக்கல விண்ணப்பம் 30.10.2002 இல் நிராகரிக்கப்பட்டு பின்னர் 27.07.2003 இல் நடுவரால் நிராகரிக்கப்பட்டது. அந்நேரம் இராணுவத்தினரால் ஏற்பட்ட பாதிப்பு நியாயப்படுத்தப்படவில்லை என்றும் நீதிபதி குறிப்பிட்டார்.

இதனை அடுத்து மீளாய்வு விண்ணப்பம் பிரபலமான நீதியரசர் கொவின்ஸினாலும் பின்னர் நீதிபதி பேன்ரன் அவர்களாலும் 18.08.2006 இல் நிராகரிக்கப்பட்டது. இந் நிலையில் இந்த விண்ணப்பதாரிக்கு 10.01.2007 இல் நாட்டை விட்டு நீக்கும் கடிதம் வழங்கப்பட்டது. அப்போதும் இவர் உயர் நீதிமன்றக் கதவுகளைத் தட்டத் தயங்கவில்லை.

அவ்விண்ணப்பத்தை பரிசீலித்த நீதியரசர் அன்டர் ஹில் அவர்கள் இந்நிலையில் இலங்கைக்கு அனுப்புவதற்கு எதிராக விசாரணை செய்யப்படக்கூடிய அளவிற்கு நியாயம் இருப்பதாக காரணம் தெரிவித்து இடைக்கால தடையுத்தரவு விதித்தார்.

ஆனால் நீதிபதி திருமதி பிளாக் அவர்கள் 34(A) ஐ.நாடுகள் அறிக்கையை காரணம் காட்டி விண்ணப்பத்தை நிராகரித்தார். மேலும் விண்ணப்ப மீளாய்வையும் விண்ணப்பதாரி வாபஸ் வாங்கியிருந்தார்.

இதனையடுத்து மீண்டும் 25.06.2007 இக்கு உள்நாட்டுச் செயலாளர் விண்ணப்பதாரியை நாடுகடத்தும் உத்தரவை வழங்கியிருந்தார். அன்றைய நாளில் ஐரோப்பிய நீதிமன்றத்திற்கு Rule 39க்கு கீழான விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து வகைதொகையின்றி செய்யப்பட்ட விண்ணப்பங்களைத் தொடர்ந்து உதவித் தலைவர் நீதிபதிகளுடன் கலந்துரையாடி பிரித்தானிய அரசாங்க முகவருக்கு ஒரு கடிதம் அனுப்பினர். அதில் ஒரு தமிழ் அகதியால் Rule 39 ஐ பாவித்து தனது நாடு கடத்தலை நீக்கும்படி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. உங்கள் நாடானது நாடு கடத்தலை வழங்கி அவருக்கு உயிர்ப் பயத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்பதாக கூறப்பட்டது.

31.10.2007 இல் முகவர் அனுப்பிய பதிலில் 9.03.2007இல் LP வழக்கின் தீர்ப்பின் படி வழிநடத்தலை கடைப்பிடிக்க உள்ளதாக கூறப்பட்டது. இன்றைய இலங்கைச் சூழ்நிலையை கருத்தில் கொள்ள வில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் Rule 39 இங்கு ஒத்துழைக்க தயாராகவுள்ளதாகவும் ஒரு முன்னணித் தீர்ப்பும் வந்து விட்டால் போதும் என்றும் பிரித்தானிய அரசாங்கம் கூறிப்பிட்டுள்ளது.

## பிரித்தானியாவின் கடும் போக்கிற்கு ஐரோப்பிய நீதிமன்றம் போட்ட கடிவாளம்

இவ்வகையான வழக்குகளில் பாவிக்கப்படக் கூடிய சரியான உள்நாட்டுச் சட்டங்கள்.

A. Immigration and Asylum: Primary and second Legislation

B. The Human Rights Act 1998

C. Judicial Review

D. Country Guidance Determinations

*வழக்குகள்*

1. I.P(LTTE Area-Tamils-Colombo risk?

2. PS (LTTE-internal Flight Sufficency of protection)

3. NM and others (Lone Women-Ashruf)

E. Horvath V.S.O.S. for the home Dept.

F. Rv The Secretrary of State for the home Dept exparie fwe Srilanka Tamils.

இவ்வழக்கில் LP வழக்கு Human Rights Watch Non Governmental Organisations. Reports போன்றவை சான்றுகளாகப் பயன்படுத்தப்பட்டன.

### UK அரசாங்கத்தின் எதிர்ப்பும் ஏற்பும்

இவ்வழக்கின் போது பிரித்தானிய அரசு தனது ஆரம்ப எதிர்ப்பையும் ஏற்பையும் தெரிவித்திருந்தது இந்நாட்டில் முறையாக வழக்குகளை தொடர்ந்து நடத்தவில்லை என் றும் இது L.P வழக்கிற்கு முந்திய வழக்கு என்றும் உள்நாட்டு நிர்வாகத்திற்கு ஒவ்வொரு சந்தர்ப்பமும் நிவாரணம் அழிக்கக்கூடிய வகையில் இருந்ததாகவும் தெரிவித்தது.

### நீதி மன்றின் மதிப்பீடு

இதனை மதிப்பீடு செய்த ஐரோப்பிய நீதிமன்றமானது பாதுகாக்க வேண்டிய நிவாரணங்கள் பிரித்தானியாவில் கிடையாது என்றும் தேசிய அளவில் வெற்றி வாய்ப்புகள் இருக்கிறதா என்பதில் ஐரோப்பிய நீதிமன்றத்திற்கு சந்தேககங்கள் இருப்பதாகவும் ஐரோப்பிய நீதிமன்றம் முன்பாக ஒருவரது நாடுகடத்தலை தடுக்கும் சந்தர்ப்பம் இல்லாவிட்டால் தமது நீதிமன்றத்தின் கீழ் அமையும் நாடுகளிலிருந்து பாதுகாப்பு கேட்கலாம் என்றும் குறிப்பிட்டது.

அத்துடன் விண்ணப்பதாரிகள் நடைமுறைச் சிக்கல்களை தவிர்க்க முன்னையதைப் போல பிரித்தானியாவில் சட்ட மீளாய்வு வழக்குப் போட்டுகொண்டிருக்க முடியாது. காரணம் முன்னைய வழக்குகள் வெற்றியடையாமையே என்பதையும் ஐரோப்பிய நீதிமன்றம் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இதனால் பிரித்தானிய அரசாங்கத்தின் ஆரம்ப எதிர்ப்புகளை ஐரோப்பிய நீதிமன்றம் ஏற்க முடியாதவை என்று கூறித் தூக்கி எறிந்தது.

விண்ணப்பதாரியின் முறையீட்டை ஐரோப்பிய மனித உரிமைகளின் பகுதி 2-3 இன் கீழ் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் சித்திரவதைகளையும் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளுக்கு கொடுமைகளுக்கு ஆளாக அமையும் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு வழக்கின் விசாரணை நடைபெற்றது.

ஆனாலும் பகுதி 2 அமையாது என்றும் பகுதி 3 மட்டுமே அமையும் என்றும் பிரித்தானிய அரசாங்கம் வாதித்தது.

(Art 3) பகுதி 3 சொல்வது என்னவென்றால் . ஒருவரேனும் சித்திரவதைக்கோ, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான நிலையிலோ அல்லது தண்டனைக்கே ஆளாகக்கூடாது என்பதே வழக்கில் இரு பகுதியினரும் தமது இறுதிச் சமர்ப்பணங்களை செய்தனர். வழக்காளி சார்பில் ஆஜரானவர் L.P வழக்கு சர்வதேச மன்னிப்புச்சபை மனித உரிமைகள் கண்காணிப்புக்குழு அறிக்கைகளின் அடிப்படையிலும் 1. நாடுகளின் நிலைப்பாடு அறிக்கை ஆகியவற்றினுடனும் ஆதாரங்களைக்காட்டி தனது சமர்ப்பணத்தை சமர்ப்பித்தார்.

பிரித்தானிய அரசு சார்பில் ஆஜரானவர் விண்ணப்பதாரிக்கு நாட்டு நிலவர அறிக்கையில் பாதிப்பு ஏதும் கிடையாது என்றும் வழக்காளி சார்பில் எவ்வித மாற்றமும் நிகழவில்லை என்றும் புலிகளுடன் சம்பந்தப்பட்டதாக பதிவுகள் எதுவும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

### நீதிமன்றின் மதிப்பீடு

நீதிமன்றம் பொதுக் கோட்பாடுகளையே அடிப்படையாகக்கொண்டு நாடுகடத்தல் வழக்குகளை தீர்மானிப்பதாகவும் அதன் முன்னால் உள்ள நாட்டு நிலைமைகளையும் ஆபத்துக்குள்ளாகும் தமிழர்களின் நிலையையும் கருத்தில் கொள்வதாகவும் ஒவ்வொரு தனிப்பட்ட வழக்கிலும் இலங்கைக்கு திரும்பிச் சென்றால். அவருக்கான மனித உரிமை மீறல்களை உருவாகுமா என்பதனையும் தீர்மானிப்பதாகவும் குறிப்பிட்டது.

பிரிவு 3 இன் கீழ் நாடு கடத்தும் நாட்டுக்குள்ள கட்டுப்பாடுகளையும் பிரிவு 3 இன் கீழ் அதற்கு மாற்றான நடவடிக்கைகள் பின்பற்றப்படமாட்டாது என்பதனையும் விசாரணைக்குட்படுத்தப்படமாட்டது என்பதனையும் விசாரணைக்குட்படுத்தப்படும் துணிவான நிலைப்பாட்டையும் உள்நாட்டு நிர்வாகம் ஒரு முடிவை எடுத்தபின்னர் வெளிச்சத்திற்கு வந்துள்ள கடத்தப்படும் நாட்டின் அன்றைய நிலையையும் கருத்திற்கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டது. நாட்டின் கலவர நிலைவரமும் கவனத்தில் கொள்ளப்பட்டது.

### நாட்டு நிலைமை மதிப்பீடு

பிரிவினர்களின் பிரிவுகள் சம்பந்தமாக UNHER மதிப்பீடுடனும் இலங்கையின் பொதுவான நிலவரத்துடனும் ஒத்துச் செல்ல வேண்டும். தற்போதைய சூழ்நிலைகளில் நிருபர்கள் முழுத் தகவல்களையும் பெற முடியுமா என்பதை சிந்திக்க வேண்டும்.

நாட்டின் மனிதாபிமான நிலைகளை உணர வேண்டும் என்றல்லாம் ஆராய்ந்து இலங்கை உகந்த நாடு அல்ல என்ற முடிவுக்கு வந்தது.

### இலங்கைக்கு திரும்பவுள்ள தமிழர்களின் மதிப்பீடு

இலங்கையில் பாதுகாப்பு நிலைவரத்தில் பல ஓட்டைகள் இருப்பதாகவும் இரு சமாதான யுகம் முடிவடைந்த ஜனவரி 2008 முதல் தொடர்ந்த கொலைகள், கடத்தல் ,காணாமல் போதல் ஆகியன உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட் டுள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபை கலாசார சித்திரவதைகளும் சட்டவிலக்குகளும் என்று வர்ணித்ததையும் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை பிரித்தானியாவின் நீதிமன்றங்கள் பாதுகாப்பு நிலைவரம் தறிகெட்டு ஓடுவதைப் பார்த்தும் மனித உரிமை மீறல்களை பார்த்தும் இங்கே உள்நாட்டுச் செயலாளர் **AIT** மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவை பெரியதாக அதற்கு வலுக்கொடுக்க அலட்டிக் கொள்ள வில்லை.

ஆனால் **UNHER** அதற்கு வலுக் கொடுத்துள்ளது என்றாலும் பிரித்தானிய உள்துறை நிர்வாகிகள் தமிழர்களை திருப்பி அனுப்பலாம் என்ற வரிந்துகட்டிக்கொண்டு நின்ற வேளையில் **UN** விசேட நிருபர் சித்திரவதை இலங் கையில் புரையோடிப்போயுள்ளதாக அறிவித்தார். **Medical Foundation for the Care of Victins of Torture** இதனை உறுதிப்படுத்தியது.

கொழும்பு செல்பவர்களுக்கான விசாரணை சிறை என்பனவும் கொடூரமானது என்றும் ஐரோப்பிய நீதிமன்றம் ஒத்துக் கொண்டது.

### தீர்ப்பு

1. விண்ணப்பம் அனுமதிக்கத்தக்கது
2. விண்ணப்பதாரியின் ECHR Article 3 மீறப்படும்
3. பிரிவு 2 வேறாக எழாது
4. U.K. அரச நீதிமன்றத்தின் தீர்ப்பு முடிவாக வரும் 3 மாதத்தின் முன்னர் Eur4451 செலுத்த வேண்டும்.

### இந்தத் தீர்வு எவ்வாறு மற்றும் பாதிக்கப்பட்டவர்களை பாதிக்கும் அல்லது ஏற்புடையதாகும்?

அரசியல் விண்ணப்பத்தில் தங்களது இயக்க ஈடுபாடுகள் சிறைகள், சித்திரவதைகள், கற்பழிப்புகள் அல்லது உறுப்பினர் கொலைகள் போன்றவற்றை தெளிவாக காட்டியிருந்தாலோ அல்லது இயக்கங்களில் ஈடுபட்டு முரண்பட்டு உயிர் தப்பி வந்திருந்தாலோ Echr Article இவர்கள் இதன் கீழ் வரக்கூடியதாக இருக்கும்.

தமிழன் என்ற வகையில் பாதிப்பு ஏற்பட்டிருந்தாலோ அல்லது அர்ச பயங்கர வாதத்தின் பிடியில் சிக்கியிருந்தாலோ அல்லது சில தமிழ் பகுதிகள் அழிக்கப்படுகையில் இழப்பீடுகளை சந்தித்திருந்தாலோ கூட இந்த ECHR Article 3 இன் கீழ் வரலாம்.

புதிய விண்ணப்பங்களை Fresh Application) உடனடியாக அனுப்பிவைக்க வேண்டும். நாட்டுநிலைமை NV வழக்கு என்பதனை குறிப்பிட்டு நாட்டு நிலைமைகளை ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். இந்த வழக்கின் தீர்ப்பின்படி ECHR Article 3 ஐ பிரித்தானியா அரச நீதிமன்றத்தின் முன் அனுமதித்து இருந்ததால் இந்த முடிவுக்கு எதிராக மேன்முறையீடு செய்யக்கூடிய வாய்ப்புகள் UK அரசுக்கு மிகக் குறை வாகவே உள்ளது.

பல ஆதாரங்களுடன் நாட்டு நிலைமையை சுட்டிக்காட்டி இவ்வழக்கு நடைபெற்று முடிந்துள்ளதால் இவ் வழக்கின் முடிவானது இறுதியாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**"தமிழினி" குலேந்திரன்**

# இலங்கையில் தொடரும் வன்முறை கலாசாரம்

இலங்கையில் நிகழ்ந்த நிகழ்ந்து வரும் வன்முறை கலசாரத்தின் தன்மை குறித்து "டெயிலி மிரர்" நாளேடு கட்டுரை ஒன்றை வெளியிட் டுள்ளது.

அதன் தமிழ் வடிவம் வருமாறு,

இலங்கை வன்முறைகள் பற்றி ஆராய் வதற்கு கறுப்பு ஜுலை இனக்கலவர அவலம் நேர்ந்த 25 ஆவது ஆண்டு பூர்த்தி நாளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

இலங்கை இனப்பிரச்சினையின் வரலாற் றில் ஓர் கறைபடிந்த அத்தியாயமாக கறுப்பு ஜுலை கருதப்படுகிறது. கொழும்பிலும் வேறு பிரதேசங்களிலும் தமிழர்கள் கொன்று குவிக் கப்பட்டதுடன் பெரும் எண்ணிக்கையிலான வீடுகள் சேதப்படுத்தப்பட்டன. 95 விழுக்காடு தமிழர்களின் வர்த்தக நிலையங்கள் தீக்கி ரையாக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாகவே இந்த கோரத் தாண்டவ வெறியாட்டம் தமிழர் கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டது.

இந்த சம்பவத்தினால் பாதிக்கப்பட்டோ ருக்கு நட்டஈடு வழங்கப்பட்ட வேண்டும் என் இலங்கை அரச தலைவர் ஆணைக்குழு பரிந் துரை செய்துள்ளது.

கறுப்பு ஜுலை அவலம் நிகழ்ந்து 25 ஆண் டுகள் பூர்த்தியாகும் இந்த சந்தர்ப்பத்தில் இனக் கலவரம் எவ்வாறு கலசார வன்முறையாக மாறி யுள்ளது என்பதனை தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

தற்போது வன்முறைக் கலாசாரம் எமது சமூகத்தில் நிறைந்து காணப்படுகின்றது. சுதந் திரத்திற்கு பின்னான இலங்கையில் காலத் துக்கு காலம் பல்வேறு பரிமாணங்களில் வன் முறைகள் வெடித்தன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான குடியுரிமை விவகாரத்தில் இலங்கை அர சாங்கம் நடந்து கொண்ட விதம் இந்த வன் முறைச் செயல்களில் முதலாவது கட்டமாக குறிப்பிடலாம்.

இலங்கையின் முதனிலை வருமான பங் களிப்பாளர்களான இந்திய வம்சாவளித் தோட் டத் தொழிலாளர்கள் இரண்டாம் நிலை குடி மக்களாகவே இந்த சட்டத்தின் மூலம் கருதப் பட்டனர்.

**இனமுறுகலை ஏற்படுத்திய தனிச்சிங்களச் சட்டம்**

1956 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்ட தனிச்சிங்கள சட்ட மூலத்தின் மூலம் இன முறுகல் நிலை ஏற்பட்டது. இலங்கை மூன்று மொழிகளால் ஆசீர்வதிக்கப்பட்ட ஓர் நாடாக போற்றப்பட்டது. தமிழ் சிங்களம் மற்றும் ஆங் கில மொழிகள் காணப்படுகின்றன.

தனிச்சிங்கள சட்டத்தின் மூலம் தமிழ் இளைஞர் யுவதிகள் பெருமளவில் பாதிக்கப் பட்டனர். உண்மையில் பிரித்தானிய கால னித்துவ ஆட்சிக்காலத்தில் சிங்கள மக்கள் ஆங்கில மொழிப் புலமையின்மையினால் எதிர் நோக்கிய அசௌகரியங்களுக்கு ஓர் தீர்வா கவே இந்த தனிச்சிங்கள சட்டமூலம் அமுல் படுத்தப்பட்டது.

எனினும் இந்த நிலைமை தமிழ் மக்களை மிகவும் மோசமாக பாதித்தது. ஆங்கில மொழி யூடான கல்வி மறுக்கப்பட்டதன் மூலம் சர்வ தேசரீதியில் நாமே நமது பின்னடைவிற்கு கார ணமாகியுள்ளோம்.

1958 ஆம் தமிழ் தலைமைகளினால் அகிம்சை வழியில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு போராட்டங்கள் இன வன்முறைகளாக வெடித்து நாடு முழுவதும் வியாபித்திருந்தது.

இந்த அடக்குமுறை நடவடிக்கைகளினால் அநேக தமிழர்கள் தாம் இரண்டாம் நிலை குடி மக்களாக நடத்தப்படுவதாக உணர்ந்தனர்.

**அஹிம்சைப் போராட்டத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இராணுவ வன்முறை**

அமைதியாக முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு போராட்டங்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இரா ணுவ வன்முறைகள் தமிழ் இளைஞர்களை கிளர்ச்சி கொள்ளச் செய்தது. இந்த நிலைமையே இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

பல வருடங்களாக இலங்கையில் கட்டம் கட்ட மான இனவன்முறைகள் நிகழ்ந்துள்ளன. இலங்கை மூன்று பிரதான கிளர்ச்சிகளை எதிர்நோக்கியதாகும். இரண்டு கிளர்ச்சிகள் தெற்கில் வெடித்தது. மற்றையது இன்றுவரை தொடர்ந்து செல்லும் போராகும். அனைத்து மோதல்களினாலும் பாரியளவில் உயிர்களும் சொத்துக்களும் சேதமடைந்துள்ளன. உதார ணமாக 1971 ஆம் ஆண்டு ஏற்பட்ட கிளாச் சியின் போது சுமார் 20 ஆயிரம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.

1988-1989ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கிளர்ச்சிகளில் சுமார் 60 ஆயிரம் இளை ஞர் கள் படுகொலை செய்யப்பட்டனர்.

தற்போது நிகழ்ந்து வரும் போரின் மூலம் இதுவரையில் சுமார் 80 ஆயிரத்துக்கும் அதிகமான உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள் ளன. அண்மையில் மருத்துவ சஞ்சிகை யொன்றின் தகவல்களின் அடிப்படையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 இலட் சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகம் எனத் தெரி விக்கப்படுகின்றது.

இந்த எண்ணிக்கையின் இரண்டு மடங் கானோர் காயமடைந்துள்ளனர். போரின் கார ணமாக ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதுடன் மேலும் அரை மில்லியனுக்கும் அதிகமானோர் அகதி முகாம்களில் வசித்து வருகின்றனர். போரின் மூலம் மட்டுமே வன்முறைச் சம்பவங்கள் நிகழ வில்லை.

**பெருந்தோட்டப்பகுதியில் நிகழும் வன் முறைகள்**

எண்ணில் அடங்காதளவு வீட்டு வன் முறைச் சம்பவங்கள் நிகழ்கின்றன. குறிப் பாக பெருந்தோட்டப் பகுதியில் தொழில் புரியும் பெண்கள் தங்களது சம்பளப் பணத்தை கண வன்மாருக்கு மதுபானம் அருந்துவதற்கு வழங் காத சந்தர்ப்பத்தில் இந்த வன்முறைச் சம்பவங் கள் வெடிக்கின்றன. பாலியல் வன்புணர்ச்சி, சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற சம்பவங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன.

ஆசியப் பிராந்திய நாடுகளைப் பொறுத்த மட்டில் அதிகளவு தற்கொலைச் சம்பவங்கள் நிகழும் நாடுகளில் இலங்கையும் இடம்பெற் றுள்ளதாக புள்ளி விபரத் தகவல்களின் மூலம் தெரிகிறது.

**கடத்தல் காணாமல் போதல் வழமையான நிகழ்வாகிப்போன துர்ப்பாக்கியம்**

கடத்தல் மற்றும் காணாமல் போதல் சம் வங் கள் வழமையான நிகழ்வாக இன்று மாறி யுள்ள ஓர் துர்ப்பாக்கிய சூழ்நிலை உருப்பெற் றுள்ளது. இலங்கையில் ஊடகங்கள் அதிகள வில்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றன.

சமூகம் என்ற வகையில் குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்படாத ஓர் வன்முறைக் கலாசாரத்தை நாம் உருவாக் கியுள்ளோமா? இலங்கை இயல்பாகவே வன்முறை நிறைந்த ஓர் நாடா? இலங்கை மக்கள் மிக வும் நட்புக்குரிய பண்பான மக்கள். பல சந் தர்ப்பங்களில் வெளிநாட்டவர்களுக்கு நாம் அடைக்கலம் அளித்துள்ளோம்.

இந்தத் தகவல்கள் சரியான முறையில் பதிவு செய்யப்படவில்லை. இலங்கை பல மதங் களின் வீடாக கருதப்படுகின்றது. இலங்கை யில் பௌத்த மதத்தை பொறுத்தமட்டில் சிறப்பி டம் காணப்படுகின்றது.

பௌத்த மதம் அனைத்து வகையான வன்முறைகளையும் முற்றாக நிராகரிக்கின் றது. இந்து மதம், கிறிஸ்தவம், இஸ்லாம் மற் றும் ஏனைய ஆன்மீக அமைப்புக்களும் இலங்கையில் காணப்படுகின்றன. இந்த அனைத்து மதங்களும் ஆன்மீக அமைப் புக்களும் வன்முறையற்ற அமைதியான வழி யைக் போதிக்கின்றன.

**கட்டமைப்பு சார் வன்முறை**

பல வகையான வன்முறைகள் காணப் படு கின்றன. கட்டமைப்பு சார்வன்முறை வறுமை உள்ளிட்ட பல்வேறு காரணிகளினால் இந்த நிலைமை தோன்றுகின்றது. பெருந் தோட் டங் களின் லயன் அறைகளில் வசிக்கும் தோட் டத் தொழிலாளர்களினால் இந்த கட்டமைப் புச் சார் வன்முறை மேற்கொள்ளப்படுகின் றது.

சுகாதாரம், கல்வி நிலைமை என்பவற்றில் மலைநாட்டுப் பிரதேசம் மிகவும் பின்தங்கிய நிலையைக் காட்டி நின்றின்றது. கலசார வன் முறை ஓர் சமூகம் அல்லது இனம் மற்று மொரு சமூகத்தின் கருத்துக்களை மறுதலித்தல் இந்த வகையினைச் சாரும். நேரடி வன் முறை களும் எமது சமூகத்தில் பல தசாப்த காலங் களாக இடம்பெற்று வருகின்றன. இலங்கை பல மதங்களையும் பல்வேறு இனத்துவ அடையா ளங்களையும் கொண்ட ஓர் சமூக அமைப்பு இலங்கையில் பல நூற்றாண்டு காலமாக காணப்படுகின்றது.

இந்த பல்லினத்துவ அடையாளங்கள் எமக்கு காணப்படும் தனித்துவமான ஒரு சொத் தாக கருதப்படவேண்டும். வன்முறைச்சம் பவங்கள் நடைபெற்ற போதிலும் எமது சமூ கங் கள் ஒற்றுமையுடன் பல காலங்களாக வாழ்ந்து வருகின்றன.

கொழும்பில் பல்லின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தமிழ் மக்கள் ஏனைய மக்க ளுடன் ஒற்றுமையாக கொழும்பில் வாழ்ந்து வருகின்றனர். 25ஆவது கறுப்பு ஜுலை நினைவு நாளில் நாம் மதிப்பீடு செய்துவிட்ட தவறு களை திருத்திக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப் பம் ஏற்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ)

# எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அரசே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்

## முன்னாள் இராணுவத் தளபதி ஜானகபெரேரா

(கொழும்பு)

எனக்கு உயிராபத்து ஏற்பட்டால் அதற்கு அரசாங்கமே பொறுப்பு என்று இலங்கையின்



முன்னாள் இராணுவத் தளபதியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் வடமத்திய மாகாணத்திற்கான முதலமைச்சர் வேட்பாளருமான மேஜர்.ஜெனரல் ஜானக பெரேரா தெரிவித்துள் ளார்.

எனக்குபோதிய பாதுகாப்பு வழங்கப் பட வேண்டும் என அரசிடம் நான் விடுத்த கோரிக்கை புறக்கணிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் வட மத் திய மாகாண சபைக்கான தேர்தல் பிரச்சாரத்தின் போது எனது உயிருக்கு ஆபத்துஏற்பட்டால்அதற்கு அரசேமுழுப்பொறுப் பாகும்

எனக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என தேர்தல் ஆணையாளர், காவல் துறை மா அதிபர் ,ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் ஆகி யோரிடம் கோரிக்கை விடுத்திருந்தேன். எனி னும் எனது பாதுகாப்புக்கு ஒரு படையினர் கூட நியமிக்கப்படவில்லை.

ஆனால் முன்னாள் முதலமைச்சர் 30 சிறப்பு அதிரடிப்படையினர், 28காவல் துறையி னர், 12 ஊர்காவல் படையினரின் பாதுகாப்புக ளுடன் உள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட்டி னார். அரசின் ஆதரவாளர்களால் எனது உயி ருக்கு ஆபதது ஏற்படடுள்ளதாககிருலப்பனை காவல்நிலையத்தை சேர்ந்த காவல்துறை யினர் எனக்கு தெரிவித்திருந்தனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

(அ)

# பெட்டிக்கடைகளை அகற்றுமாறு கொழும்பு மாநகர சபை உத்தரவு

(கொழும்பு)

மருதானை ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் பாதையில் இரு மருங்கிலும் இருக்கும் இரும்பு பெட்டி கடைகளை அகற்றுமாறு கொழும்பு மாந கரசபை எழுத்துமூலம் உத்தர விட்டுள்ளது. பாதை யின் இரு மருங்கிலும் நூற்றுக்கும் அதிகமான கடைகளில் வாகனங்களின் பழைய உதிரிப் பாகங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இக்கடைகளை நடத்தவதற்கு சட்டரீதிய ான அனுமதியைகொழும்பு மாநாகர சபை வழங்கி இருந்தது. குறித்த தினததிற்குள் கடை களை அகற்றாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-6)

# புலிகளின் கடல் ஆதிக்கத்தை குறைக்க படையினர் நடவடிக்கை

## த ஐலண்ட் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியை நோக்கி இலங்கைப்படையி னர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ள நிலை யில் தமிழீழவிடுதலைப்புலிகளின் இந்திய கடல்ஆதிக்கத்தைகுறைக்கமுடியும் என படைத் தரப்பு எதிர்பார்ப்பதாக 'த ஐலண்ட் செய்தி வெளி யிட் டுள்ளது.

இதற்காக தமிழகத்தில் இருந்து வன்னிக் கான போக்குவரத்தை இந்தியா நிறுத்தினால் தமிழீழ விடுதலைப்புலிகளின்கடல் ஆதிக் கத்தை மன்னார் வளை குடாபகுதியில் குறைக்க முடியும்என இலங்கையின் படைத் தரப்பு குறிப் பிட்டுள்ளது. தமிழ்நாட்டில் இருந்தே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான ஆயுத விநியோ கங்கள் இடம் பெற்று வருவதாகவும் இலங்கை படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (அ)

# "சார்க்" நாடுகளுக்கு இடையில் புலனாய்வுத் தகவல் பரிமாற்றங்கள்

## பாலித கோஹன தெரிவிப்பு

(கொழும்பு)

தெற்காசியப் பிராந்திய நாடுகளுக்கு இடையிலான புலனாய்வுத் தகவல் பரிமாற் றங்களை எதிர்வரும் காலங்களில் கிரமமான முறையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக் கப் படும் என வெளிவிவகார அமைச்சின் செய லாளர் பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற இருக்கும் சார்க் உச்சிமாநாட்டின் பின்னர் அதற்குரிய நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் சுட் டிக்காட்டியுள்ளார்.

இதற்கு முன்னரும் தெற்காசிய நாடு களுக்கு இடையில் புலனாய்வுப் பரிமாற் றங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் எதிர் வரும் காலங்களில் அவற்றைக் கிரமமாக மேற் கொள்வதே இதன் நோக்க மென்றும் வெளிவி வகார அமைச்சின் செயலாளர் என்றும் ,

இதன் மூலம் தெற்காசியப் பிராந்தியத்தில் இடம் பெறும் பயங்கரவாத நடவடிக்கைகளை முடக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

(அ)

கரங்கள் சுத்தமாக இருக்கின்றனவா என்பதை கடவுள் பார்க்கிறார். நிறைவாக இருக்கின்றனவா –என்பதையல்ல.

– இங்கிலாந்து

வலம்புரி

## நரையன் நாற்பது செங்காரி முப்பது

நரையன் நாற்பது; செங்காரி முப்பது என்பது கிராமங்களில் பேசப்படும் பழமொழியாகும்.

ஒரு வண்டியில் பூட்டப்படும் இரண்டு மாடுகளில் நிறவேறுபாடுகளின் அடிப்படையில் விலை வேறுபடுவதை இப் பழமொழி சுட்டி நிற்கின்றது.

இப்பழமொழிக்கு இப்போது என்னதேவை என்று நீங்கள் வினவிக்கொண்டால் யாழ். குடா நாட்டில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் அரிசிக்கு இப் பழமொழி சாலப்பொருத்துடையதாக அமைகின்றது.

அதாவது தற்போது ஒரு பங்கீட்டு அட்டைக்கு ஐந்து கிலோ கறுப்பரிசியும், இரண்டு கிலோ சம்பா அரிசியும் வழங்கப்படுகின்றன.

ஒரு கிலோ கறுப்பரிசி 73 ரூபாய் 50 சதத்திற்கும், ஒருகிலோ சம்பா அரிசி 55 ரூபாய்க்கும் விற்பனையாகின்றது.

கறுப்பரிசி என்றால் அதற்கொரு வகைமைப்பாடு உண்டு. ஆனால் இந்தக் கறுப்பரிசியை கிராமிய மொழியில் கூறுவதாயின் 'உதவத்த அரிசி' எனலாம்.

அதேபோல் சம்பா அரிசி, தன்னிலையிழந்து, அதீத குடியினால் நொந்து கெட்ட மனிதர்கள் போல் காட்சி தருகின்றது.

அதிகூடிய விலையில் பங்கீட்டு அடிப்படையில் தரம் குறைந்த அரிசியை விநியோகிப்பதில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முன் நிற்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

மக்களின் நலன் பேணுவதே கூட்டுறவுச் சங்கங்களின் தலையாய கடமை.

ஏழை மக்கள் தமது வருமானக் குறைவு காரணமாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை நாடுகின்றனர்.

தமது கஷ்ட நிலையை போக்கும் வகையில் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் குறைந்த விலையில் தரமான பொருட்களை தரும் என்ற நம்பிக்கையில் மக்கள் இருக்கும்போது பொது மக்களின் நம்பிக்கைக்கு மாறாக, ஒன்றுக்கும் பயன்படுத்த முடியாத அரிசிக்குக் கறுப்பரிசி என பெயர் சூட்டி அதற்கு 73 ரூபாய் 50 சதம் விலை நிர்ணயித்து விற்பதென்பது மக்களை ஏமாற்றும் நடவடிக்கையாகவே கருதப்படவேண்டும்.

90 ரூபாய்க்கு தரமான கறுப்பரிசியை தனியார் வர்த்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்போது 16 ரூபாய் 50 சதத்துக்கு ஆசைப்பட்டு தரமற்ற அரிசியை பெற்றுக்கொள்ளவேண்டிய தேவை எவருக்கும் இருக்க மாட்டாது.

எனவே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தரமான பொருளை விநியோகிப்பதில் மிகவும் தெளிவாக இருக்கவேண்டும்.

பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் என்றால் அங்கு தரமற்ற –பழுதான பொருட்களே விற்பனை செய்யப்படும் என்ற எண்ணக்கரு பொது மக்களிடம் உண்டு.

இந்த எண்ணக்கருவை உடைத்து பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் மக்கள் நலன் சார்ந்தவை என்ற உண்மையை – உறுதிப்படுத்தும் தார்மீகப்பொறுப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளுக்கு உண்டு.

# நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெறுமா காங்கிரஸ் கூட்டணி

(புதுடில்லி)

நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறவுள்ள நிலையில் காங்கிரஸ் கூட்டணியை ஆதரிக்கும் எம்.பி.க்களின் எண்ணிக்கை 272 ஐ தாண்டுமா? என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது.



அதேவேளை தற்போதைய பா.ஜ.க. மற்றும் இடதுசாரிகள் கட்சியின் அணிக்கு ஆதரவு எம்.பிக்களின் எண்ணிக்கை 259 ஆகவுள்ளது.

அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்த பிரச்சினையை யடுத்து மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐ.மு.கூட்டணி, அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்கி வந்த இடது சாரிக் கட்சிகள் தமது ஆதரவை வாபஸ்பெற்றுக்கொண்டதையடுத்து மேற்படி ஒப்பந்தம் மீது பாராளுமன்றத்தில் பிரதமர் மன்மோகன் சிங் நம்பிக்கை வாக்கெடுப்பு கோர இணக்கம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 545. இதில் 2 வெற்றிடங்கள் உள்ளன. ஒரு உறுப்பினருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை. எனவே நம்பிக்கை வாக்கெடுப்பில் காங்கிரஸ் கூட்டணி அரசு வெற்றிபெற வேண்டுமாயின் குறைந்தபட்சம் 272 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

தற்போது காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவு கட்சிகளின் எண்ணிக்கையையும் சேர்த்து 261 எம்.பி.களின் ஆதரவு உள்ளது. நம்பிக்கைவாக்கெடுப்பில் வெற்றிபெற வேண்டுமாயின் இன்னும் 11 எம்.பி.க்களின் ஆதரவு தேவைப்படுகிறது.

எனவே பிற சிறிய கட்சிகள் மற்றும் சுயேச்சைகளின் ஆதரவை திரட்டுவதில் காங்கிரஸ் மும்முரமாக உள்ளது. இதற் காக மத்திய மந்திரி பிரணாப் முகர்ஜி தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது.

அந்த குழுவினர் சிறிய கட்சிகள் மற்றும்சுயேச்சை எம்.பிக்களை தொடர்பு கொண்டு பேசிவருகிறார்கள். மேலும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் இம்முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

நம்பிக்கை தீர்மானத்தை தோற்கடிப்பதற்காக செயற்பட்டு வரும் பாரதீய ஜனதா கூட்டணி மற்றும் இடதுசாரி கட்சிகள் அணிக்கு தற்போதைய நிலையில் 259 எம்.பிக்களின் ஆதரவு உள்ளது. பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் வாஜ்பாய் மற்றும் அக் கட்சியைத் சேர்ந்த ஸ்ரீகண்டப்பா, ஹரிஷ்சந்தர் சவுகான், தர்மேந்திரா ஆகிய 4 எம்.பிக்கள் உடல் நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வருகிறார்கள். எனவே அவர்கள் நம்பிக்கை வாக்கெடுப்பின் போது பாராளுமன்றத்துக்கு வந்துவாக்களிப்பார்களா? என்பது கேள்விக்குறியாகியுள்ளது. (அ)

# வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் மரநிழலில் தங்கியிருக்கும்அவல நிலை

## ஐ.நா.மனிதாபிமான நிறுவனங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்கள், தமக்கு மரநிழல்களில் தங்கியிருக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனிதாபிமான நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் யு.என்.எச்.சி. ஆர். நிறுவனமும் யுனிசெப் நிறுவனமும் சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு கூடாரங்களை வழங்கியுள்ளது.

இதேவேளை சோஆ, வேல்ட்விசன் போன்ற அமைப்புக்கள் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கியுள்ளன.

அரசாங்க அதிபரிடம் இருந்து குறைந்தளவான நிவாரணங்களே கிடைக்கப்பெற்றதை அடுத்தே இந்த நிறுவனங்கள் தமது நிவாரணங்களை வழங்கியுள்ளன.

மாந்தை மேற்கு துணுக்காய் மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் இருந்து கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான சுகாதார நடவடிக்கைகள், மல்லாவி அரசாங்கம் வைத்திய சாலையிலிருந்து அக்கரையான் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்த மல்லாவி பெரியமடு மற்றும் மன்னாரின் மாந்தை மேற்கு ஆகிய இடங்களில் இருந்த சுமார் 24ஆயிரம் பேர் வரை கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்கள் ஏற்கனவே கிளிநொச்சியில் இடம்பெயர்ந்திருந்த சுமார் 106,000 மக்களுடன் இணைந்துள்ளமையை அடுத்து அங்கு பாரிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. கிளிநொச்சி அரசாங்க அதிபரின் கடந்த 14ஆம் திகதி தரவுப்படி 6,652 குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 244 பேர் இடம்பெயர்ந்திருந்த நிலையில் தம்மை பதிவு செய்துகொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏற்கனவே மடு மற்றும் மாந்தைப்பகுதிகளில் இருந்து சுமார் 30 பாடசாலைகள் வேறு இடங்களுக்கு தமது கல்வி நடவடிக்கைகளை மாற்றியுள்ளன. (அ)

# அமெரிக்க காங்கிரஸின் பிரேரணைக்கு எதிராக கருத்துக்கூற இலங்கை தயாராகிறது

(கொழும்பு)

ஐக்கிய அமெரிக்கா அண்மையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வந்த பிரேரணைக்கு எதிராக கருத்துக்களை முன்வைக்க இலங்கை அரசாங்கம் எதிர்பார்ப்பதாக "த நேசன்' ஆங்கில செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்தப் பிரேரணையில் இலங்கையின் மனித உரிமைகளை கண்காணிக்க ஐக்கிய நாடுகள் அமையத்தின் அலுவலகம் இலங்கையில் அமைக்கப்படவேண்டும். அதே நேரம் மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்துவதற்காக தொடரும் யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தக்வல் அறிந்த தரப்புகளின் செய்திகளின் படி இலங்கையின் வெளியுறவு அமைச்சு அமெரிக்காவின் இந்த முனைப்புக்கு எதிரான அறிக்கையை தயாரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் குறித்த பிரேரணையின் காரணமாக இலங்கைக்கு பாரிய பாதிப்பு ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த பிரேரணையை அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்க தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவுக் குழுக்கள் பிரயத்தனம் மேற்கொண்டதாக 'த நேசன்' செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பிரேரணையை அமெரிக்க காங்கிரஸில், கலிபோனியா பிரசேர் மன், நியூஜேசியின் பிராங் பலோன் மற்றும் இல்லின்னொய்ஸின் ஜெரி வெல்லர் ஆகியோர் கடந்தவாரம் முன் வைத்திருந்தனர். (அ-6)

## ஓலைச் சுவடிகள் 63

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### பயணம் செல்லுபவரை பின்னாலிருந்து அழைக்கலாமா?

எங்கேயாவது பெரியவர்கள் புறப்பட்டுச் செல்லும் போது பின்னாலிருந்து அழைக்கும் போது சிறுவர்களை நாம் அனேகமாக எல்லா வீடுகளிலும் காணலாம். இவ்வாறு அழைக்கும் சிறுவர்களை அதட்டுவதும் தண்டிப்பதும் உண்டு.

இதற்கு விஷேசமான காரணங்கள் எதுவும் வெளிப்படையாக இல்லை என்றாலும் மன நூல் அடிப்படை யிலும் நற்பண்பின் பாதுகாப்புக்கும் இதை கண்டிப்பதும் நன்று. மிக முக்கியமான விஷயத்துக்காகவோ, மிக அவசரமாகவோ பெரியவர்கள் புறப்பட்டுச் செல்ல விருக்கலாம். இப்படி புறப்படுபவரை பின்னாலிருந்து அழைத்தால் அவர்கள் குழப்பமடைவதற்கும் எரிச்சல் கொள்ளுவதற்கும் ஏதுவாக அமையும் என்பது மனநூலின் கருத்து.

இதனால் இப்படி அழைப்பது அபசகுணம் என்று சிறுவர்களை கண்டித்து வைத்திருந்தனர் முன்னோர்கள்.

# கனடாவில் கல்வி

(சென்றவாரத் தொடர்ச்சி)

**வாட்டர் லூம் பல்கலைக்கழகம்**

இந்த பல்கலைக்கழகம் புதுமைகளைப் புகுத்துவதாக அறியப்படுகிறது. கடந்த 11 ஆண்டுகளாக கனடாவின் ஒட்டுமொத்த சிறந்த பல்கலைக்கழகமாக இதுசிறந்து விளங்குகிறது. துரிதமாக எதையும் கற்றுக்கொள்ளும் சூழலை இந்தப் பல்கலைக்கழகம் தருகிறது. இங்கு பாடம் நடத்துவதும் மேற்கொள்ளப்படும் ஆய்வுப் பணிகளும் சர்வதேச அளவில் மிகவும் உயர்வானதாக இருக்கிறது. எந்தப் பிரிவில் படித்தாலும் கம்பியூட்டர் திறனானது சிறப்பான அடிப்படைத் திறனாக போதிக்கப்படுகிறது. இங்குள்ள நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் ஆய்வகங்களும் நூலகங்களும் இதனால் பெறும் தகவல்களும் வேறு எங்கும்காணமுடிவதில்லை. அப்ளைட் ஹெல்த் சயின்ஸ், கலை, பொருளியல், சூழல்கல்வி, கணிதம், அறிவியல், அக்கவுண்டன்சி, ஆப்டோமெட்ரி, ஆர்க்கிடெக்சர், கம்பியூட்டர் சயின்ஸ், பிளானிங் போன்றவற்றை ஆய்வு அடிப்படையில் கற்றுக் கொள்ளலாம். தனியார்துறைக்கு நவீன உத்திகளையும் தொழில்நுட் பத்தையும் கற்றுத் தருவது இந்த பல்கலைக் கழகம் தான். இதன் கூட்டுறவுப் படிப்பும் புகழ் பெற்றது. பட்டப் படிப்புக்கு முந்தைய படிப்புகளுக்கு கல்விக் கட்டணமாக ஆண்டுக்கு ரூ. 7 இலட்சத்திலிருந்து 13 இலட்சம் வரை பெறப்படுகிறது. பட்டப் படிப்புக்கு ரூ 9 இலட்சத்திலிருந்து 18 இலட்சம் வரை ஆகிறது. பல்கலைக்கழக வளாகத்திலேயே விடுதி அமைந்திருப்பதால் அங்கே தங்கி படிக்கலாம் என்றாலும் வெளியே தங்கிப் படிப்பதே குறைவான செலவை உள்ளடக்கியிருக்கிறது.

**கொலம்பியா பல்கலைக்கழகம்**

பிசினஸ் மற்றும் இன்ஜினியரிங் படிப்புகளுக்கான இந்த பல்கலைக்கழகம் அறியப்படுகிறது. கனடாவின் வான்கூவர் நகரத்தில் அமைந்திருக்கிறது இந்தப் பல்கலைக்கழகம். உலகின் தலைசிறந்த 40 பல்கலைக் கழகங்களில் ஒன்றாக இது விளங்குகிறது. இதன் மாணவர்களின் புத்திக்கூர்மை, ஆசிரியர்களின் நடத்தும் திறன், பல்கலைக்கழக ஊழியர்களின் சிறப்புத் திறன் ஆகிய காரணங்களால் இந்த பல்கலைக்கழகமானது கலை, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகிறது. இதில் தற்போது சுமார் 45 ஆயிரம் பேர் படிக்கிறார்கள். இதன் வளாகத்திற்குள் தற்போது தனி சிறப்பு நகரம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதில் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு மேம்பட்ட சமூகம் இயங்குகிறது. ஜப்பான், கொரியா மற்றும் மெக்சிக்கோ நாட்டு மாணவர்கள் பலர் இதை உருவாக்குவதில் பெரும் பங்காற்றி வருகிறார்கள். ஆசிய மாணவர்களுக்காக விரைவில் ஹொங்கொங்கில் இதன் அலுவலகம் திறக்கப்படவுள்ளது.

பட்டப்படிப்புக்கு கல்விக் கட்டணமாக ஆண்டுக்கு ரூ 11 இலட்சம் பெறப்படுகிறது. எம்.பி.ஏ., படிப்புக்கு 18 இலட்சம் வரை அகிறது. பல்கலைக்கழக வளாகத்திலேயே விடுதி அமைந்திருப்பதால் அங்கே தங்கி படிக்கலாம் என்றாலும் வெளியே தங்கிப் படிப்பதே குறைவான செலவை உள்ளடக்கியிருக்கிறது.

**கனடாவின் சிறந்த பல்கலைக்கழகங்கள்**

- வாட்டர்லூம் பல்கலைக்கழகம்
- டொரண்டோ பல்கலைக்கழகம்
- மெக்கில் பல்கலைக்கழகம்
- சைமன் பிரேசர் பல்கலைக்கழகம்
- கார்லடன் பல்கலைக்கழகம்
- மாண்ட்ரீல் பல்கலைக்கழகம்
- குவின்ஸ் பல்கலைக்கழகம்
- பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம்
- கன்கார்டியா பல்கலைக்கழகம்
- ஆல்பார்டா பல்கலைக்கழகம்

**ஆர்.யூ.பாலமுருகன்**

# சிலம்பில் துலங்கும்

(நேற்றைய தொடர்ச்சி)

பிண்டி எனப்படும் ஒற்றைக் கைமுத்திரைகளையும் அவை 33ஆம் பிணையல் எனப்படும் 15இரட்டைக்கை முத்திரைகளையும் அவற்றில் அழகிற்காக காட்டப் பெறும் எழிற்கைகளையும் ஏதேனும் செயற்பாட்டினைவிளக்கும் தொழிற் கைகளினையும் பற்றிய பூரண விளக்கங்களை அறிந்திருப்பவராகவும்



வரிக்கூத்து 8 வகைப்படும் அவை கானல் வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரி, வேட்டுவரி என்பனவாகும். இவையும் குரவைக் கூத்தும் ஒன்றுடன் ஒன்று கலவு படாமல் பார்த்துக் கற்பிக்ககூடியவல்லமையுடையவனாக ஆடல் ஆசான் காணப்பட வேண்டும் என சிலப்பதிகாரம்வழி கூறுகின்றது.

ஆடலுக்குரிய பக்க வாத்தியங்களாக மிருதங்கம், புல்லாங்குழல், யாழ் (தற்காலத்தில் வயலின்), ஆமந்திரிகை, முழவு என்பன பயன்படுத்தப்பட்டமையை கண்ணுமை முதலான குழலோன், யாழோன் போன்ற பாடல்களில் காணலாம். நாட்டியத்தின் உயிர்நாடியாக விளங்கும் பாடலும் பாடல் ஆசிரியனும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குரிய இலக்கணங்களும் அரங்கேற்றுக் காதையில் இசையோன் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

மேலும் சிலம்பின் 24 வகை அபிநயங்கள் கூறப்பட்டுள்ளதாக அடியார்க்கு நல்லார் தன் உரையில் கூறுகின்றார்.

மாதவியின் நாட்டியச் சிறப்புக்களை கூறும் அரங்கேற்றுக் காதைப் பகுதியிலே நாட்டியக் கலை தொடர்பான பல தகவல்கள் இருப்பதை காணலாம். அவளது அரங்கேற்றத்தினூடாக தனிப்பெண் கலைஞரின் ஆடல்கள் இடம்பெற்றமையை அறியலாம்.

சாஸ்திர அறிவு, செய்கை, மொழி அறிவு, வாத்தியம் மற்றும் இசையறிவு, கலைஞர்களைக் கௌரவித்தல் போன்ற வரன்முறையான நாட்டியக் கலைசார்ந்த விடயங்கள் கூறப்பட்டுள்ளன. பட்டினத்திலே செந்நெறி ஆடலும் கிராமங்களிலே நாட்டார் ஆடல்களும் விளங்கியமையை சிலப்பு தெளிவாக எடுத்துக் கூறுகின்றது.

20ஆம் நூற்றாண்டின் பின் பல நவீன அரங்குகள் தோற்றம் பெற்றாலும் நாட்டியத்தின் சிறப்பிற்காக அவை மூல நூல்களைப் பின்பற்றியே நவீனத்துவம் பெற்றிருக்கின்றன. சிலப்பதிகாரத்திலே அரங்கு பற்றி இளங்கோ வடிகள் தெளிவான விளக்கத்தைத் தந்துள்ளார். அதாவது முதலில் அரங்கம் அமைப்பதற்குரிய இடத்தினைத் தெரிவு செய்தல், பின்னர் உயர்ந்த மலைகளிலே வளர்ந்த கணுவுக்கு கணு ஒரு சாண் அளவுள்ள மூங்கிலை வெட்டி சாரசரி அளவுள்ள உத்தமனின் கைப்பெருவிரல் அளவு 24கொண்டதாக (24 விரல் 1 1/2அடி) வெட்டி இந்த அளவின் படி 7கோல் அகலமும் எட்டுக் கோல்நீளமும் ஒரு கோல் உயரமும்மாக அமைக்கப்பட்டது. நாற்புறமும் தூண் நிறுத்தி உத்தரப்பலகை வைத்தல், போகவும் வரவும் இரண்டு வாதைகளும் அரங்கத்தின் மேற்பகுதியில் 4 வகை வருண பூதங்களை வரைந்து நிலையான விளக்குகளை 4 புறமும் நிறுத்துதல், ஒரு முக எழினி, பொருமுக எழினி, கரந்து வரல் எழினி, (எழினி-திரைச்சீலை) வைத்தல் சித்திர வேலைப்பாடு கொண்ட மேல் விதானம் அமைத்தல், முத்துமாலைகள் தொங்க விடல், இவ்வாறு ஒரு நாட்டியத்திற்குரிய அரங்கம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

கால்கோட் காதை பகுதியில் "நாடக மடந்தைய ஆடலரங்கு யாங்கணும்" ஆடல் அரங்கெங்கும் நாடக மகளிர் மன்னனை வாழ்த் தினர் என்று கூறப்பட்டுள்ள பகுதிகளில் அரங் கத்திற்குரிய செய்திகள் சொல்லப்பட்டிருப்ப தைக் காணலாம்.

நாட்டிய அரங்கேற்றத்தின் போது நாட்டிய மங்கை வலப்பக்கமாக மேடைக்கு வரவேண்டும் என்றும் நாட்டியக் கச்சேரிக்கு பக்கவாத்தியம் வழங்கும் குழுவினர் தமக்கு வழங்கப்பட்ட இடத்தில் (மேடையின் இடப்புறம்) நின்றபடியே வாத்திய இசையை வழங்குவர். (பிற்காலத்தில் நாட்டியத்தின் மறுமலர்ச்சியில் ஸ்ரீமதி ருக்குமணி தேவியருண்டே பக்கவாத்தியக் கலைஞர்கள் இருந்து வாசிக்கும் முறையைக் கொண்டு வந்தார்).

மேலும் நாட்டியத்திலே சிறந்து விங்கும் கலைஞர்களுக்கு அக்காலத்திலே தலைக்கோல் பட்டம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. போரிலே புறமுதுகிட்ட பகைவனிடமிருந்து பறிக்கப்பட்ட வெண்கொற்றக் குடையின் காம்பினை எடுத்து நவமணிகள் பொருத்தி வெண்தகடு பொருத்தி அரண்மனையில் வைக்கப் பெற்றிருக்கும்.

இதனையே பின்னர் பட்டத்து யானையில் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு அரங்கின் முன் வைக்கப்பட்டு ஆடல் நங்கைக்கு வழங்கப்படுவதே தலைக்கோல் பட்டமாகும்.

சிலப்பதிகார ஆடல் நங்கையான மாதவி செந்நெறி பரதத்திற்குரிய ஆடை, அணிகலன்களையே அணிந்து காணப்பட்டதாக கூறப்படுகிறது. அந்த வகையில் தற்கால பரத நாட்டியத்தின் பரிமாணவளர்ச்சிக்கு மூலக் கூறுகள் பலவற்றை சிலப்பதிகாரமும் தந்திருப்பதை அறியக் கூடியதாக உள்ளது.

**சிலப்பு கூறும் கூத்துக்கள்**

சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள் மக்கள் வாழ்க்கைக் கூத்து வகைகள் பலவற்றைக் குறிப்பிட்டுள்ளார். ஆடல் ஆசான் பகுதியிலே குறிப்பிட்ட அகக்கூத்து, புறக்கூத்து, சாந்திக் கூத்து, விநோதக் கூத்து, 11வகையாடல் இவற்றை விட இன்னும் பல கூத்துக்களையும் குறிப்பிட்டுள்ளார். அதுமட்டுமன்றி பட்டினப்பாக்கத்திலே அழகுப் புனைவுகளால் மக்களை இன்புறுத்துகின்ற கூத்தரும், கணிகையரும் ஆடல் தொழிலோரான அரங்க கூத்திலரும் வாழ்ந்ததை இந்திரவிழா ஊர் எடுத்த காதைப்பகுதியில் கூறுகின்றார்.

# ஆடல் அற்புதங்கள்

மேலும் வேத்தியல், பொதுவியல் என்ற இருவகைக் கூத்தினது இயல்புகளை நன்றாக ஆக்கக் கூத்தியர், முறைப்படி ஆடுபவர்களாகவும், ஆலுக்கேற்ப பாடுபவர்களாகவும் தாளங்கள், தாளங்களின் முத்தாய்ப்புக்கள் இவற்றைச் சோத்திசைக்கின்ற குயிலுவக்கருவிகளின் இசைகளைத் தெளிவாக உணந்தவர்களாகவும் தலைக்கோல் பட்டம் பெற்ற நாடகக் கணிகையரும், வாரப் பாடல் பாடும் தேரிய மகளிரும் தலைப்பாட்டுப் பாடும் கூத்தியரும், இடைப்பாட்டுப் பாடும் கூத்தரும் ஆகிய நாடகக் கணிகையர் மதுரையில் வாழ்ந்து வந்ததாக ஊர்காண் காதையிலே கூறுகின்றார்.

அத்துடன் கொங்க நாட்டுக் கூத்தரும், கர்நாடக நாட்டுக் கூத்தரும் சேரமானை வாழ்த்தியதாகக் கூறப்படும் செய்தியில் நாடக மகளிர் 104 பேரும் குயிலுவக் கலைஞர்கள் 208 பேரும் இருந்ததாகக் கூறப்படுவது அக்கால ஆடல் மகளிர் பற்றிய செய்திகளும் கலைஞர்களுக்கும் அரசர்களுக்கும் இருந்த தொடர்பினை எடுத்துக்காட்டுகின்றன.

துணங்கைக்கூத்து, குரவைக்கூத்து பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. பூதவழிபாட்டின் போது தெய்வமேறி வெறியாடும் மறக் குடிப் பெண்களால் இக் கூத்துக்கள் ஆடப்பட்டதாக இந்திர விழா ஊர் எடுத்த காதை கூறுகிறது.

வேட்டுவரிப் பகுதியிலே வேட்டு வரிக் கூத்துப் பற்றிய செய்திகளைக் காணலாம். கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளுடன் காட்டினைக் கடந்து மதுரைக்குச் செல்லும் வழியிலே கொற்றவையின் கோயிலிலே சென்று இளைப்பாறு கின்றனர். அங்கே கூடிய பெண்கள் சாலினி என்னும் தெய்வமேறி கண்ணகியின் வாழ்க்கையின் பின் நிகழ் வுகளை எதிர்வு கூறிய துடன் வேட்டு வரிப் பாடல்பாடிக்கூத் தாடுகின்றனர். இவர்களில் ஒருவர் சாலினித் தெய்வத்தின் வேடம் புனைந்து ஆட அவளை மற்றவர்கள் வழிபட்டு ஆடுவர். இதே பகுதியில் கொற்றவைத் தெய்வத்தின் வழிபாட்டின் போது மரக்கால் கூத்து, வாட்கூத்து ஆகிய செய்திகள் காணப்படு கின்றன. ஆடல் பாடலில் ஈடுபடும் பாணருடன் இணைந்து கோவலனும் ஆடியதற்கான சான்றுகளும் உள்ளன.



ஆய்ச்சியர் குரவைப் பகுதியிலே ஆயர்களின் சேரியிலே கண்ணகி இருந்த காலத்தில் ஆயர் குலப் பெண் தாம் கண்ட தீய சந்தர்ப்பங்களையும் கனவுகளையும் எண்ணி அவற்றால் ஏதும் தீங்கு ஏற்படாமல் இருப்பதற்காக தம் குல தெய்வமாகிய கண்ணனை வேண்டி குரவைக்கூத்து ஆடினர். ஆய்ச்சியர் குரவை ஆயர் குலத்திற்குரியதொன்றாகும். இதற்காக ஏழு பெண்கள் குரல், துத்தை, கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழு பெயர்களைத் தமக்கு சூட்டியபடி கூத்து நூல் சொன்ன மரபு மாறாது கிருஷ்ணனின் அற்புத லீலைகளை விளக்கிப் பாடியாடினர். (இந்த 7 பெயர்களே பிற்காலத்தில் 7 ஸ்வரங்களின் தமிழ்ப் பெயராகக் குறிப்பிடப்படுகின்றன.)

**உ.உமாமகேஸ்வரி**
நாட்டியக் கலாவித்தகர்
(இறுதி வருடம்)
இராமநாதன் நுண்கலைப்பீடம்.

குன்றக்குரவைப்பகுதியிலேமதுரையைஎரித்த பின் கண்ணகி திருச்செங்குன்றினை அடைகிறாள். அங்கு அவளை தேவர்கள் விண்ணிலிருந்து வந்து அவள் கணவனிடம் அழைத்துச் செல்கின்றனர். இதனைக் கண்ட குறவர் குடியினர் அவளைத் தெய்வமாகப் போற்றியதுடன் தம் குல தெய்வமான முருகப்பெருமான் மீது அவள் புகழ்பாடி குரவைக் கூத்தாடினர். குன்றக் குரவை பொதுவாக குறவர் குடியினரின் கூத்தாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கவை.

இவற்றைவிட வென்றிக்கூத்து, முன் தேர்க் குரவை, கனவேவரி போன்ற போர்க்கள கூத்துக்கள் பற்றியும் சிலம்பு கூறுகின்றது. இவ்வாறாக கூத்து மரபில் இருந்து தோற்றம் பெற்று இன்று பரத நாட்டியமாக மிளிரும் ஒரு நாட்டியக் கலையின் சிறப்புக்களை சிலப்பதிகாரம் உணர்த்தி நிற்பதைக் காணலாம்.











கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் முத்தமிழ் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி பாலசரோஜா பாலசிங்கம் உரையாற்றுவதையும், முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், பாடசாலை மாணவியரின் குழு இசை இடம்பெறுவதையும் மற்றும் பார்வையாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:கவி)

# இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க இங்கிலாந்து அணி போராட்டம்



## டி வில்லியர்ஸின் சதத்தின் மூலம் தென்னாபிரிக்கா பலமான நிலையில்

(லீட்ஸ்)

டி வில்லியர்ஸின் சிறப்பான சதத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 522 ஓட்டங்களை எடுத்தது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 4 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் 2-வது டெஸ்ட் கடந்த 18ஆம் திகதி லீட்ஸில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களை எடுத்தது. இதில் பீற்றர்சன் 45, பெல் 31 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் மோர்கல், ஸ்ரையன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர' முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 322 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி டி வில்லியர்ஸின் சிறப்பான சதத்தின் மூலம் அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 522 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டி வில்லியர்ஸ் 174 ஓட்டங்களையும் பிறின்ஸ் 149 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் அன்டர்சன், பனீசர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் பற்றின்சன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 320 ஓட்டங்களை எடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்றைய 3ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 50 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

இதில் குக் 23 ஓட்டங்களுடனும் அன்டர்சன் ஓட்டமெதனையும் எடுக்காமலும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்ததுடன் அணித் தலைவர் வோகன் 21, ஸ்ரொரஸ் ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் மக்காஜா நிற்னி 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். (5)

# டெண்டுல்கரை வீழ்த்துவேன் அஜந்த மெண்டிஸ் சபதம்



இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரின் விக்கெட்டை வீழ்த்துவதே தனது இலட்சியம் என்று இலங்கையின் இளம் சுழல் பந்துவீச்சாளர் அஜந்த மெண்டிஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பில் மெண்டிஸ் கூறியதாவது, சச்சின் டெண்டுல்கரின் விக்கெட்டை வீழ்த்துவது என்பது என்னுடைய கனவாகும். குறிப்பாக அதிக ஓட்டங்களை எடுத்த பிரைன் லாராவின் சாதனையை அவர் முறியடிக்கவுள்ள கட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் விக்கெட்டை வீழ்த்துவது மிகப்பெரிய விடயமாக இருக்கும் இவ்வாறு அவர் கூறியுள்ளார். மேலும் கங்குலி, டிராவிட், லக்ஸ்மன் ஆகிய துடுப்பாட்ட வீரர்களுக்கு எதிராக பந்துவீசுவது சவாலாக இருக்கும் என்று கூறிய அவர், இந்த சவாலை ஆர்வத்தோடு எதிர்நோக்கி இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தியர்களுக்கு எதிராக பிரத்தியேக உத்தியை பின்பற்றப்போவதாக கூறிய மெண்டிஸ் அது பற்றிய விபரங்களை வெளியிட மாட்டேன் என்று கூறினார். (5)

# இலங்கை துடுப்பாட்ட வீரர்களுக்கு இஷாந்த் நெருக்கடி தருவார்

## சமிந்தவாஸ் எச்சரிக்கை


(கொழும்பு)

டெஸ்ட் தொடரில் இலங்கை துடுப்பாட்ட வீரர்களுக்கு இஷாந்த் சர்மா கடும் நெருக்கடி கொடுப்பார் என சமிந்தவாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை வந்துள்ள இந்திய அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் நாளை மறுதினம் கொழும்பில் ஆரம்பமாகிறது. இதற்கான பயிற்சி ஆட்டத்தில் தற்போது இந்திய அணி ஆடிவருகிறது. இதில் பந்து வீசிய இஷாந்த் சர்மா முதல் இன்னிங்ஸில் ஒரு விக்கெட் மட்டுமே கைப்பற்றினர். இவரது பந்து வீச்சை இலங்கை அணியின் ஆரம்ப வேகப்பந்துவீச்சாளர் வாஸ் புகழ்ந்துள்ளார்.

இது பற்றி வாஸ் கூறியதாவது, இஷந்த் பந்து வீச்சை தொடர்ந்து கவனித்த வருகிறேன். சர்வதேச அளவில் அவரது பந்து வீச்சின் முறை எனக்கு பிடித்துள்ளது. வழக்கமாக வேகமாக பந்துவீசும் இஷாந் உருவத்திற்கு ஏற்ப பந்து வீசும் கை அளவும் உயரமாக வருவதால் துடுப்பாட்ட வீரர்களுக்கு பந்து எந்த அளவில்வீசப்படுகிறது என்பதை கவனிப்பது கடினமாகும். டெஸ்ட் தொடரில் இலங்கை துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி தருவார்.



### அபாய அறிவிப்பு

வழக்கமாக எந்த ஒரு அணிக்கும் இலங்கையை அதன் சொந்த மண்ணில் முரளிதரனின் பந்துவீச்சுடன் எதிர்கொள்வது அபாயத்தை தரும்.

இவருடன் இப்போது மெண்டிசும் சேர்ந்து கொண்டுள்ள செய்தி இந்திய அணிக்கு நிச்சயம் ஒரு அபாய அறிவிப்புத்தான். இது புகழ் பெற்ற துடுப்பாட்ட வரிசை கொண்ட அணிக்கும், ஆபத்தான ஸ்பின் பந்துவீச்சை வைத்துள்ள அணிக்கும் எதிரான விறுவிறுப்பான போராட்டம் நிறைந்த தொடராக இருக்கும்.


அதற்காக முரளிதரனையும் குறைத்து மதிப்பிடக் கூடாது. இந்தியாவின் முக்கிய அபாயமே முரளிதரன்தான். ஆனால் மெண்டிஸ் இப்போதுதான் முதன் முதலாக டெஸ்ட் கிரிக்கெட்டில் பங்கேற்கிறார்.

ஆசிய கோப்பை போட்டியின் போது தனது சிறந்த பந்துவீச்சை வெளிப்படுத்தினார். டெஸ்ட் தொடரில் துடுப்பாட்ட மன்னர்கள் சச்சின் சேவாக், டிராவிட், கங்குலி, லக்ஸ்மன் ஆகியோருக்கு எதிராக அவர் எப்படி செயல்படுகிறார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

### ஓய்வு

துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயற்படுகிறேன். நான் விக்கெட்டுக்கள் எடுப்பதும் ஓட்டங்கள் எடுப்பதும் என்று நின்று விடுகிறதோ அன்றுமுதல் இலங்கைக்காக கிரிக்கெட் ஆடுவதை நிறுத்திவிடுவேன். இவ்வாறு வாஸ் தெரிவித்தார். (5)

# மூன்று நாள் பயிற்சி ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவு



## காம்பீர் அரைச்சதம்

(கொழும்பு)

இந்தியா-இலங்கை கிரிக்கெட் சபை லெவின் அணிகளுக்கிடையிலான பயிற்சி ஆட்டம் சமனிலையில் முடிபுற்றது.

இரண்டாவது இன்னிங்ஸில் 276 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களை எடுத்த போது மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவடைந்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட் ,5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதற்கு முன்னாக மூன்று நாள் பயிற்சி ஆட்டத்தில் இலங்கைக் கிரிக்கெட் சபை லெவின் அணியுடன் மோதியது.

கடந்த 18ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில் நாணய்ச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கிரிக்கெட் சபை லெவின் அணி, அதன் முதலாவது இன்னிங்ஸில் 224 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது 8 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மூன்றாவதும் இறுதி நாளான நேற்று ஆட்டம் ஆரம்பமானபோது இந்திய அணி முதலாவது இன்னிங்ஸை அதிரடியாக இடை நிறுத்தியது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களையிழந்து 196 ஓட்டங்களை எடுத்த இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 28ஓட்டங்களால் பின்னிலை வகித்தது. இதில் கார்த்திக் ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கிரிக்கெட் சபை லெவின் அணி சாமரசில்வா, பிரசாத்தின் சிறப்பான ஆட்டத்தால் 6 விக்கெட்டுக்களை இழந்து 247 ஓட்டங்களை எடுத்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் சாமரசில்வா 59 ஓட்டங்களையும் பிரசாத் 43 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் அணித்தலைவர் முபாரக் 41 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுக்களையும் சகீர்கான், இஷாந்த் சர்மா மற்றும் முனாப் பட்டேல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸில் 276 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்றைய இறுதிநாள் ஆட்டம் முடிபடையும் போது 2 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன் மூலம் இரு அணிகளுக்குமிடையிலான மூன்று நாள் பயிற்றி ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்தது.

இதில் கௌதம் காம்பீர் 60 ஓட்டங்களையும் காம்பீர் 22 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் டிராவிட் 26, சேவாக் 14 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் பிரசாத், ஹேரத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். (5)

# உதைபந்தாட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லீக்கால் நடத்தப்பட்டுவரும் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு பாடுமீன் ஏ விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழகமும், 4.45 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சென்.நீக்கிலஸ் ஏ அணியை எதிர்த்து றோயல் அணியும் மோதுகின்றன. (5)

## வலிந்து...

வழங்கிய பேட்டியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் தனது பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

முகமாலை முன்னரங்கு நிலைகளில் விடுதலைப்புலிகள் கடும் பயிற்சி பெற்ற தமது போராளிகளை நிறுத்தியுள்ளனர். அவர்களைப் போன்று நாமும் எமது உயர் பயிற்சி பெற்ற படையினரை அங்கு குவித்திருக்கின்றோம்.

குடாநாட்டைக் கைப்பற்றும் நோக்குடன் புலிகள் முகமாலை முன்னரங்குகள் மீது தாக்குதல் நடத்தினால் அவர்களை எவ்வாறு அழிப்பது என்ற உபாயம் எமக்குத் தெரியும். அவர்கள் அவ்வாறு தாக்குதல் நடத்த வேண்டும் என்று நான் பிரார்த்திக்கின்றேன்.

அவ்வாறு தாக்கினால் அந்தச் சமரில் நாம் வெல்வோம். கடந்த தடவை முகமாலையில் இடம்பெற்ற சண்டை எமக்குத் தோல்வியே அல்ல. நாம் எமது இலக்கை அடைந்தோம் என்றுதான் கூற வேண்டும்.

நீங்களே பார்க்கலாம். 8 கிலோமீற்றர் அகலம் கொண்ட–ஒடுங்கிய–துருப்புக்களை நகர்த்தக் கூடிய வசதியற்ற கிளாலி–நாகர் கோவில் பிரதேசத்திலேயே இந்தச் சண்டை நடைபெற்றது.

அப்படியான ஒரு பகுதியில் சண்டை நடைபெறும்போது இழப்புக்கள் தவிர்க்க முடியாதவை. ஆனால் இந்தச் சமரில் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் எண்ணுக் கணக்கற்றவை. எமது தரப்பில் 3 ஆம் வகை (பி3) காயங்களுக்கு உள்ளான படையினர்தான் அதிகம்.

அவர்கள் மருத்துவமனையில் குணமடைந்து மீண்டும் கடமைக்குத் திரும்பி விட்டார்கள். இந்தச் சமரில் படையினருக்குப் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டன என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டமைதான் கவலைக்குரிய விடயம்.

ஆனால் அந்தச் செய்திகளில் எந்த உண்மையும் இல்லை. எமது படைகளின் வெற்றிக்குக் காரணம் திறமையான தலைமைதான். அந்த சிறந்த தலைமைத்துவத்தால் எமது படையினர் மிகுந்த தன்னம்பிக்கையுடன் உள்ளனர் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (ச–5)

## பிரித்தானிய...

பொலிஸ் சேவை அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களை ஒருங்கிணைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை. இந்த நிலையில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த உயர் ஸ்தானிகராலய அதிகாரி ஒருவர்,

பிரித்தானிய அரசாங்கம் நிர்வாகச் செலவீனங்களைக் குறைப்பதற்காக உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள தனது தூதரகங்களின் பாதுகாப்புப் பிரிவை மூடியுள்ளது.

இலங்கையிலும் அவ்வாறானதொரு நடவடிக்கையை மேற்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. எனினும் அதனை ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாகக் கருத முடியாது என்றார். (ச–5)

# பாலமீன்மடு மனிதப் புதைகுழி சுதந்திர விசாரணை வேண்டும்

## த.ம.வி.புலிகள் வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பாலமீன்மடு அகதி முகாம் அருகில் கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பில் அரசாங்கம் சுதந்திர விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதிர்ச்சிகரமான இந்தச் சம்பவம் தொடர்பில் அரசாங்கம் பக்கச் சார்பற்ற விசாரணைகளை நடாத்துவதன் மூலமே இது தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியுள்ள சந்தேகங்களை நீக்க முடியும் என தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பேச்சாளர் ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

மரபணு மற்றும் ஏனைய பரிசோதனைகளுக்கு முன்னுரிமை கொடுத்து இந்த விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவரையான விசாரணைகளின்படி இந்த மரணங்கள் அரசாங்கம் போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறுவதற்கு 5 மாதங்களுக்கு முன்னராக நடைபெற்றிருப்பது தெரியவந்துள்ளதாகவும் அக் காலப் பகுதியில் விடுதலைப்புலிகள் கிழக்கில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாகவும் ஆசாத் மௌலானா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த மனித எச்சங்கள் நீதிமன்றத்தின் உத்தரவின்படி அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கிழக்கிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிஹால் சமரக்கோன் தெரிவித்துள்ளார். (ச–5)

# படுகாயமடைந்த ஆட்டோ சாரதி மரணம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதி, சட்டநாதர் கோவிலடியில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் மினிபஸ்ஸுடன் விபத்துக்குள்ளாகி படுகாயம் அடைந்த ஆட்டோச் சாரதி நேற்றுக் காலை சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நாயன்மார்கட்டு, பாரதி லேனைச் சேர்ந்த முத்துசந்திரன் (வயது–54) என்ற ஆட்டோச் சாரதியே சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.நீதிவான் ஆர்.வசந்தசேனன், பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கு உத்தரவிட்டார். (ச–5)

## பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க...

தில் இரு இடங்கள் வெற்றிடமாகவுள்ளன. நியமன உறுப்பினர்கள் இருவர் உட்பட 543 உறுப்பினர்கள் உள்ளனர். அரசு அமைக்க 272 உறுப்பினர் எண்ணிக்கை அவசியம்.

ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் பலம் 226. பெரும்பான்மைப் பலத்தைப் பெற அதற்கு இன்னமும் 46 உறுப்பினர்கள் தேவை. சிபுசோரன், அஜித்சிங் ஆகியோர் தங்கள் முடிபை அறிவித்துள்ள நிலையில் காங்கிரஸுக்கு தற்பொழுது 266 எம்.பிக்களின் ஆதரவு உள்ளதாகவும் எதிரணியினருக்கும் அதேயளவு ஆதரவு (266)இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற 271 வாக்குகள் தேவை. இதற்கமைய காங்கிரஸுக்கு இன்னும் ஐந்து வாக்குகள் தேவை. 9 எம்.பிக்கள் இன்னமும் எந்த முடிபும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க நாடாளுமன்றத்தின் விசேட கூட்டம் இன்று கூடுகின்றது. பகல் 11 மணிக்கு முதல் நிகழ்ச்சியாக இடைத் தேர்தலில் வெற்றிபெற்ற எம்.பிக்கள் பதவி ஏற்று கொள்கின்றார்கள்.

அதன் பிறகு மரணமடைந்த முன்னாள் எம்.பிக்கள் 5 பேருக்கு இரங்கல் தெரிவிக்கப்படுகின்றது. அதைத் தொடர்ந்து பல்வேறு தகவல் அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சிகள் முடிந்ததும் பிரதமர் மன்மோகன் சிங் தனது அரசு மீது நம்பிக்கை கோரும் ஒரு வரித் தீர்மானத்தைச் சபையில் தாக்கல் செய்கிறார். உடனே இதன் மீது விவாதம் தொடங்கும்.

நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் தவிர மொத்தம் 36 கட்சிகள் உள்ளன. அனைத்து கட்சித் தலைவர்களும் தீர்மானத்தின் மீது பேசுவார்கள். நாளை 2 ஆவது நாள் விவாதம் நடைபெறும். அப்போது பெரிய கட்சிகளின் தலைவர்கள் பேசுவார்கள். கடைசியாக எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி பேசுவார்.

விவாதத்துக்கு பதில் அளித்து பிரதமர் மன்மோகன் சிங் பேசுவார். பின்னர் நம்பிக்கைத் தீர்மான வாக்கெடுப்பு நடைபெறும். அப்போது அரசு தப்புமா? இல்லையா? என்பது தெரிய வரும். ஆட்சியைக் காப்பாற்ற காங்கிரஸ் போராடுகின்றது.

காங்கிரஸுக்கு ஆதரவு தெரிவித்த சமாஜ்வாடி கட்சியில் மொத்தம் 39 எம்.பிக்கள் உள்ளனர். இதில் 4 பேர் மாயாவதியோடு கை கோர்த்துள்ளனர். அவர்கள் அரசுக்கு எதிராக வாக்களிப்பதாக அறிவித்து விட்டனர்.

இந்தக் கட்சியில் இருந்து இன்னும் சிலரும் கூட மாயாவதி பக்கம் சாய்வார்கள் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. இது காங்கிரஸுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி இருக்கின்றது.

ஜார்கண்ட் முக்தி மோச்சா, மதசார்பற்ற ஜனதா தளம், ராஷ்டிரிய லோக்தளம் ஆகிய கட்சிகளில் மொத்தம் 11 எம்.பிக்கள் உள்ளனர். இவர்களின் ஒட்டுமொத்த ஆதரவும் கிடைத்து விட்டால் பெரும்பான்மையை நிரூபித்து விடலாம் என்று காங்கிரஸ் கருதியது. இதற்கான முயற்சியில் ஈடுபட்டது.

ஜார்கண்ட் முக்தி மோச்சாவில் 5 எம்.பிக்கள் உள்ளனர். இதன் தலைவர் சிபுசோரனுடன் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடத்தியது. சிபுசோரன், பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசினார். சோனியாவைச் சந்தித்துப் பேசினார்.

அதன் பின்னர் அவர் காங்கிரஸுக்கு ஆதரவாக வாக்களிப்பதாக அறிவித்தார். அஜித்சிங் தலைமையிலான ராஷ்டிரிய லோக் தளத்தில் 3 எம்.பிக்கள் உள்ளனர். அவர் திடீரென்று உத்தரப் பிரதேச முதல் மந்திரி மாயாவதியைச் சந்தித்துப் பேசினார்.

பின்னர் மத்திய அரசுக்கு எதிராக வாக்களிப்போம் என்று அவர் அறிவித்தார். இது மத்திய அரசுக்குப் புதிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. தேவகவுடா கட்சியில் 3 எம்.பிக்கள் உள்ளனர்.

அவருடன் காங்கிரஸ் பல கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. ஆனாலும் அவர் காங்கிரஸின் பக்கம் சாயவில்லை. அவர் மத்திய அரசுக்கு எதிராக வாக்களிக்கத் திட்டமிட்டிருப்பதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரே எம்.பியைக் கொண்ட மஜிலீஸ் இதேதுல் முஸ்லி மன் கட்சி காங்கிரஸுக்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதாக அறிவித்துள்ளது. எதிரணியிலுள்ள அகாலி தளம் மற்றும் சிவசேனாக் கட்சியில் சிலர் காங்கிரஸுக்கு ஆதரவாக வாக்களிக்கலாம்.

அல்லது வாக்கெடுப்பினைப் புறக்கணிக்கலாம் என்று காங்கிரஸ் நம்புகின்றது. இது மத்திய அரசுக்கு சாதகமாக அமையும் என்றும் காங்கிரஸ் தரப்பில் கூறப்படுகின்றது. ஆனால் இதற்கான சாத்தியம் குறைவாகவே யுள்ளது.

மேலும் ஆதாயத்துக்காக அலையும் சுயேட்சைகளின் ஆதரவு மூலம் மத்திய அரசைக் காப்பாற்றலாம் என்றும் காங்கிரஸ் நம்புகின்றது. (ச–5)

## சார்க்கில்...

ளில் பிளவை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பிராந்திய நாடுகளின் சில அரசியல் கட்சிகள் சீ–4 போன்ற அதிசக்தி வாய்ந்த வெடி பொருள்களைப் பயங்கரவாத அமைப்புக்களுக்குத் தொடர்ச்சியாக வழங்கி வரும் விடயங்களை மாநாட்டின்போது அம்பலப்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச–5)

## அரச சார்பற்ற அமைப்புக...

வெளிநாட்டவர்களை வேலைக்கு அழைக்க வேண்டும். இவ்வாறு வெளிநாடுகளிலிருந்து வந்து பணிபுரிபவர்கள் இலங்கையின் சட்ட ஒழுங்கு முறைகளை மதித்துத் தமது வேலையில் மாத்திரம் கவனம் செலுத்த வேண்டும். சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்று எவராவது அடையாளம் காணப் பட்டால் அவரது விசா உடனடியாக இரத்துச்செய்யப்படும்.

இலங்கையில் பணிபுரிய வரும் வெளிநாட்டவர்களுக்கு இனிமேல் மூன்று வருடங்களுக்குத் தங்கி பணிபுரிவதற்கு மட்டுமே விசா வழங்கப்படும். வருடா வருடம் விசாவைப் புதுப்பித்துக் கொள்ளும் நடைமுறை இவ்வளவு காலமும் அமுலில் இருந்து வந்தது.

இவ்வாறு இலங்கைக்கு வந்து பணிபுரிய விரும்புபவர்களின் விசா விண்ணப்பங்கள் பாதுகாப்பு அமைச்சினால் அல்லது புலனாய்வுத் துறையினால் பரிசீலனை செய்யப்படும். அதன் பின்னரே குறிப்பிட்ட பணியாளர்கள் நாட்டுக்குள் வருவதற்கு அனுமதிக்கப்படுவர்.

இவை உட்பட இன்னம் பல விதிமுறைகள் உள்துறை அமைச்சினால் சகல அரச சார்பற்ற அமைப்புகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச–5)

## இலுப்பைக்கடவை படையினர்...

நேற்று முன்தினம் முழுவதும் மேற்கொண்ட முன்னகர்வின் முயற்சியின் பயனாகவே அப் பகுதி முழுவதும் நேற்றுக் காலை கைப்பற்றப்பட்டது.

கடந்த 16 ஆம் திகதி படையினரால் கைப்பற்றப்பட்ட விடத்தல் தீவுப் பகுதியிலிருந்து முன்னகர்ந்த படையினர் விடத்தல் தீவுக்கு வடக்கில் 10 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இலுப்பைக்கடவையினைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த 21 வருட காலமாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த இந்தப் பகுதி கடற்புலிகளின் படையெடுப்பு நடவடிக்கைகளுக்கான பிரதான நகராகக் காணப்பட்டது.

குறித்த பிரதேசத்தினை கைப்பற்றுவதற்காகப் படையினர் மேற்கொண்ட தாக்குதல்களின்போது விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் தொடர்பான தகவல்கள் இது வரையும் வெளியாகவில்லை.

தற்போது இலுப்பைக்கடவைப் பகுதியில் முகாமிட்டுள்ள படையினர் அங்கிருந்து சுமார் 2 கிலோமீற்றர் முன்னோக்கி நகர்ந்து வருகின்றனர் என்றார். (ச–5)


Good Opportunity for You

Flash
1 GB Kingston
2 GB Kingston
4 GB Kingston
8 GB adata

Intel Dual-Core 2.0 Processor,
Asus Motherboard,
1 GB DDR 2, 160GbHard Disk,
DVD R/W
ATX Case with SMPS,
15'' CRT Monitor,
Keyboard & Optical Mouse.
UPS

Moniter
15" Samsung
17" Intex
17" NOV (IBM LCD)

RAM
256 DDR 1
512 DDR 1
1 GB DDR 1
256 DDR 2
512 DDR 2
1 GB DDR 2
2 GB DDR 2

All Type Casing

Woofer
microlab 5.1
microlab 2.1
A4 TECH 5.1
INTEX 5.1

Intex Ups
Personal UPS

VGA Card
Asus AGP 128MB,
PC Express 256MB

Hard Disk
80 GB IDE
120 GB IDE
160 GB Sata

Processor Cooler Fan
LGA & 478
HIGH SPEED FAN

Computer Table

Printer
1005 hp Laser Jet
Hp DeskJet - All in One

hp Toner (No 1) Warranty 1 & 3 Years With Service
(இலங்கையில் ஓ முகவரினால் அங்கீகரிக்கப்பட்டது)
Printer Ribbon, Cartridges and Tonner
குறிப்பு:– [ உங்களுக்காக விடுமுறை நாட்களிலும்! ]
திருமுருகன் கொம் நெற்
259 கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம்.
(ஆல்சிலோன் டிஸ்றிபியூட்டர்ஸ் முன்பாக)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.